Registered as a news paper.
இலவசப் பிரதி
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சீ-653)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 14 (18.03.2003) செவ்வாய்க்கிழமை இதழ் :166

# ஜப்பானின் பிரின்ஸ் ஹோட்டேலில் இன்று 6 ஆம் கட்டப் பேச்சு ஆரம்பம்

## உத்தியோகப்பற்றற்ற சந்திப்பு நேற்றும் நடந்தது

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் சிறிலங்கா அரசதரப்புப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான, 6 ஆம் கட்டப் பேச்சுவார்த்தை இன்று ஜப்பானில் நடைபெறுகிறது.

தலைநகர் ரோக்கியோவில் இருந்து 600 கிலோமீற்றர் தொலைவிலுள்ள, 'ஹெக்கோன்' நகரத்தில் அமைந்துள்ள 'பிரின்ஸ்' ஹோட்டேலில், ஜப்பானிய நேரப்படி இன்று பிற்பகல் 3 மணிக்கு பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகவுள்ளன.

இப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக, ஜப்பானிய நேரப்படி காலை 8.30 மணிக்கு, ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசுசி அகாஷியும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கமும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை - இருதரப்புப் பிரதிநிதிகளுக்கும், ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசுசி அகாஷி, மதியம் 12 மணிக்கு விருந்து ஒன்றை (10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் சென்ற விமானத்தின் ரயருக்கு காற்றுப் போனது!

## மூன்று மணி நேரம் தாமதமானது

சிறிலங்கா எயார்லைன்ஸ் மூலம் சென்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், மெரித்தா என்ற ஜப்பானிய சர்வதேச விமான நிலையத்துக்கு மூன்று மணிநேரம் தாமதமாகச் சென்றடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையிலிருந்து புறப்பட்ட இந்த விமானம், மாலைதீவு விமான நிலையத்தில் தரையிறங்கும்போது, விமானத்தின் சக்கரம் ஒன்று காற்றுப்போயிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, மாலைதீவில் 3 மணிநேரமாகத் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் 3 மணிநேரம் தாமதித்தே விமானம் ஜப்பானை சென்றடைந்தது.

ஜப்பான் நேரப்படி 11.05க்கு வரவேண்டிய இந்த விமானம், பிற்பகல் 1.50 இற்கு மெரித்தா விமான நிலையத்தைச் சென்றடைந்தது.

## ஒரு அமர்வுக்கு யசுசி அகாஷி தலைமை

(ரோக்கியோ)

ஜப்பானில் இன்று தொடக்கம் நான்கு நாட்கள் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையின் ஒரு அமர்வுக்கு ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி தலைமை வகிப்பார் என்று அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது நடைமுறையில் இருக்கும் போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் திருத்தவோ, மீளாய்வு செய்யவேண்டிய (10 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் தாக்குதலை கண்டித்து மட்டக்களப்பில் ஹர்த்தால்

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பல்மீது, கடற்படை தாக்குதல் நடத்தி மூழ்கடித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து, மட்டக்களப்பில் நேற்று பூரண கதவடைப்பு இடம் பெற்றது.

செங்கலடி, வவுணதீவு, களுவாஞ்சிக்குடி ஆகிய பல்வேறு இடங்களில் வர்த்தக நிலையங்களை மூடி, மக்கள் தங்கள் எதிர்ப்பினை வெளிக்காட்டினர்.

இதேவேளை - நேற்று பெரும்பாலான பாடசாலைகள் இயங்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவச் சமநிலை பேணல்; இன்றைய பேச்சுகளில் ஆராய்வு!

## ஆலோசனைகளை விடுதலைப் புலிகள் முன்வைப்பர்

(ரோக்கியோ)

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இராணுவச் சமநிலையைத் தொடர்ந்து பேணுவது எப்படி என்றும், தற்போதைய நிலையில் இராணுவச் சமநிலையைப் பாதிக்கும் விடயங்கள் குறித்தும் இன்று ஜப்பானில் ஆரம்பமாகும் ஆறாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் விரிவாக ஆராயப்படவுள்ளது. இதற்கான ஆலோசனைகளை விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையின்போது முன்வைப்பார்கள்.**

ஜப்பானில் உள்ள ஹெக்கோன் நகரில், இன்றுமுதல் நான்கு நாட்கள்வரை நடைபெறவிருக்கும் ஆறாம் சுற்றுப் பேச்சுக்களின்போது, இவ்விடயம் குறித்து அரசும், விடுதலைப் புலிகளும் விரிவாகப் பேச்சு நடத்தவுள்ளனர்.

அண்மைக்காலமாக இராணுவச் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில், அரசு தொடர்ச்சியான பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது என்றும், எனவே, இவ்விடயத்தில் உடனடியாகக் கவனஞ் செலுத்தவேண்டும் என்று தாம் கருதுவதால், இன்றுமுதல் ஆரம்பமாகும் ஆறாம் சுற்றுப் பேச்சுக்களின் போது, இராணுவச் சமநிலையைப் பாதிக்கும் விடயங்கள் குறித்து தாம் பிரஸ்தாபிக்கவிருப்பதாக விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குப் பின்னர், அரசாங்கம் தனது ஆயுதப் படைகளின் பலத்தை வலுப்படுத்தும் வகையில், பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக பல வெளிநாடுகளிடமிருந்து ஆயுதக்கொள்வனவை செய்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



உலகம் சமமெண்டு சொல்ல கொழும்பிலயெல்லே தராசு மேல கீழ போகுது...!

# அரசும் — விடுதலைப் புலிகளும் எம்மை தலையிட ஆரம்பத்தில் கோரியிருக்கலாம்

## கப்பல் அழிப்பு சம்பவம் குறித்து கண்காணிப்புக் குழு

(கொழும்பு)

திருகோணமலை ஆழ்கடலில் நடந்த அசம்பாவிதத்தின் பின்னரும் அரசும், விடுதலைப் புலிகளும் சமாதானத்தில் தமக்குள்ள பற்றுறுதியை மீண்டும் நிரூபித்துள்ளனர். எந்த இராணுவ ரீதியான மோதல்களையும் விடுத்து, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மதித்துப் பேணுமாறு இலங்கை அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் நாம் கேட்டுக் கொள்கின்றோம் என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கேட்டுள்ளது.

திருகோணமலைக்குக் கிழக்கே, ஆழ்கடலில் புலிகளின் வணிகக் கப்பல் கடற்படையால் தாக்கியழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, கண்காணிப்புக்குழு நேற்று தனது அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அவ்வறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்தநிறுத்த உடன்படிக்கை குறித்துக் கருத்துக்கூற கண்காணிப் (10 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலைக் கடலில் சென்ற மூவர் கடற்படையால் கைது

## பின்னர் பிணையில் விடுவிப்பு

திருகோணமலைத் துறைமுக உயர் பாதுகாப்பு எல்லைக்குள் படகில் பயணம் செய்த மூன்று விடுதலைப் புலிகளை கடற்படையினர் கைது செய்து பொலிஸாரிடம் கையளித்திருக்கின்றனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றது. கடற்படையின் ரோந்துப்படகு, சந்தேகத்துக்கிடமான மேற்படி படகை நிற்கும்படி உத்தர விட்டதாகவும், ஆனால் அந்த உத்தரவை மீறி, படகு விரைவாகச் சென்றதாகவும் எனினும், இவர்கள் பின்னர் துரத்திப் பிடிக்கப்பட்டதாகவும் கடற்படை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (10 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கு கௌரவமளித்தே ஜப்பான் வந்துள்ளோம்!

## அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

சமாதானப் பேச்சுக்களுக்கு உரிய கௌரவமளித்தே நாம் ஜப்பானுக்கு வந்துள்ளோம். அமைதிப் பேசசுக்களைக் குழப்புவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம் என, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

ஜப்பான் சென்றதும் அங்கு செய்தியாளரிடையே பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# போர் நிறுத்த உடன்பாடே பேச்சின் முக்கிய விடயம்

## நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர்



இன்று ஜப்பானில் நடைபெறும் பேச்சுக்களின் போது, போர் நிறுத்த உடன்பாடு தொடர்பாகக் கவனம் செலுத்தப்படவுள்ளதாக நோர்வே வெளிவிவகாரத் துணை அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்துள்ளார்.

அரசியல் விடயங்களில் அதிக கவனம் செலுத்த, அரசியல் ரீதியான பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும். கள நிலைவரங்களைச் சமாளிக்கக் கூடியவாறு அமையவேண்டும் என்று தெரிவித்த ஹெல்கிசன்-

மோதல் ஏற்படும்போது அத னைத் தவிர்க்கும் விதிமுறைகளைத் (10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.
(சீ-626)

# வவுனியா அகதி முகாமில் இருப்போருக்கு நான்கு மாதங்களாக உலர் உணவு இல்லை!

வவுனியா, பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களுக்கு, கடந்த நான்கு மாதங்களாக உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இது குறித்து அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நலன்புரி நிலையத்தில், தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையிலுள்ள ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் தங்கியிருக்கின்றன.

இதேவேளை - இந்த நலன்புரி நிலையத்துக்கான மின்சார விநியோகத்தை மின்சார சபை நிறுத்தியுள்ளது. மீண்டும் நலன்புரி நிலையத்துக்கு மின்சார விநியோகம் வழங்கப்படவேண்டும் என்றும் அங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஜே.வி.பியுடனான கூட்டணி; இலச்சினை குறித்து நாளை பேச்சு!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் நாளை மற்றொரு சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்படவிருப்பதாக, பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இதுவரை நடைபெற்ற பேச்சுக்களின் மூலம், சுமார் இருபத்தைந்து விடயங்களில் இணக்கம் காணப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அவர்,

நாளை நடைபெறவுள்ள பேச்சில்,

ஜே.வி.பியுடனான கூட்டணிக்குப் புதிய பெயர் வைப்பது மற்றும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான இலச்சினையைத் தெரிவு செய்வது என்பன குறித்து ஆராயப்படும் என்றும் மங்கள சமரவீர மேலும் குறிப்பிட்டார்.

# நல்லூர் பிரிவில் 200 வீடுகளை நிக்கொட் அமைத்துக் கொடுக்கும்

(மானிப்பாய்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 200 வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு 'நிக்கொட்' நிறுவனம் முன்வந்துள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளின்போது, வீடுகள் அழிந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு, நிக்கொட் நிறுவனத்தின் ஏற்பாட்டின் கீழ் வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளைப் பிரதேச செயலகம் ஆரம்பித்துள்ளது.

அரியாலைப் பகுதியில் தற்போது அழிவடைந்து, சேதமடைந்து காணப்படும் வீடுகளில் ஒரு பகுதியும் இத்திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.

அரியாலைப் பகுதி கிராம அலுவலர்கள், முழுமையாக வீடுகள் உடைந்து வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களின் பெயர் விபரங்களைச் சேகரித்துவருகின்றனர். (100)

## பாடசாலைக்கு நிதி ஒதுக்கீடு

(மானிப்பாய்)

சுன்னாகம், றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில், புதிய வகுப்பறைக் கட்டடத் தொகுதி அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மிகவும் பழமைவாய்ந்த இப்பாடசாலைக்கு, புதிய வகுப்பறைக் கட்டடங்களை நிர்மாணிக்க சுன்னாகம் பிரதேசசபையினால் ஒரு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேற்படி நிதி போதுமானதாக இல்லாதிருப்பதால் - மேலதிக நிதியை பொதுமக்களிடமிருந்து எதிர்பார்ப்பதாக பாடசாலை அபிவிருத்திச் செயலர் ஜே.லெ.மரியதாஸ் தெரிவித்தார். (100)

# மட்டு. கிரிக்கெட் போட்டியில் மருத்துவர்களின் அணியை வென்ற மருத்துவப் போராளிகள் அணி!

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகளின் மருத்துவத்துறைப் போராளிகளுக்கும், மட்டு. - போதனா வைத்தியசாலை மருத்துவர்களுக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் மருத்துவத்துறைப் போராளிகள் அணி வெற்றிபெற்றது.

நேற்றுமுன்தினம் வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய மருத்துவத்துறைப் போராளிகள் அணி 20 ஓவர்களில் 250 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்து ஆட்டத்தை ஆரம்பித்த மட்டு. போதனா வைத்தியசாலை மருத்துவர்களின் அணி, 14 ஓட்டங்களே பெற்றநிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து படுதோல்வியடைந்தது.

இந்தக் கிரிக்கட் போட்டியில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு.- அம்பாறை மாவட்டத் தளபதி பிரபா உட்பட, புலிகளின் பல பொறுப்பாளர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## மரக்கன்றுகள் விநியோகம்

மருதனார்மடத்தில் அமைந்திருக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தினால் பயன்தரும் மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

எலுமிச்சை, மா, தோடை, கமுகு போன்ற பயன்தரு மரங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

மேலும் - இச்சிறுபோகக் காலத்தில் தக்காளி கத்தரி, கறிமிளகாய், மிளகாய் நாற்றுக்கன்றுகளும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.(100)

# கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாதபட்சத்தில் அமெரிக்கா, இந்தியாவிடம் முறையீடு!

(கொழும்பு)

கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு, சமாதானப் பேச்சுவார்த்தையில் தீர்வு காணப்படாதுபோனால், இது சம்பந்தமாக அமெரிக்கா, இந்தியா உட்பட பல உலகத் தலைவர்களைச் சந்திப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று, வட - கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக, நாடாளுமன்ற உறுப்பினர் ∴பேரியல் அஷ்ரப் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர் கைது!

(அராலி)

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் அராலி வடக்கு, செட்டியார்மடச் சந்தியில் இடம்பெற்றது. தனது புதிய கடைத்திறப்பு விழாவின்போது சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றபோதே இவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

குறித்த நபரை நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர் செய்தபோது, அவரை பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

(118)

## வீதி திருத்தம் பயிற்சிப் பட்டறை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள, மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையான 19.2 கி.மீ. நீளமான கடற்கரை வீதியை, சிரமதானம் மூலம் செப்பனிடுவதற்கான பயிற்சிப் பட்டறை, நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

உலக உணவு ஸ்தாபன அதிகாரிகள் கலந்துகொள்ளும் இப் பயிற்சிப் பட்டறையில், உலக உணவு திட்டத்தின் அதிகாரிகள் அன்டேசன் ராம், ரவி ஆனந்தராசா, என்.புண்ணியசீலன் ஆகியோர் கலந்துகொள்வர்.

## தாச்சி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்க அனுசரணையுடன், கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் நடத்தும் லீக் முறையிலான தாச்சி சுற்றுப்போட்டி, அதன் மைதானத்தில் இன்றுமுதல் ஆரம்பமாகிறது.

இன்று 18 ஆம் திகதி - கட்டுடை விநாயகர் வி.க எதிர் இணுவில் கலாஜோதி வி.க.

19 ஆம் திகதி - நவாலி தென்றல் வி.க. எதிர் உடுவில் உதயசூரியன் வி.க.

20 ஆம் திகதி - இணுவில் அண்ணா வி.க. எதிர் உடுவில் ஐக்கியம் வி.க.

21 ஆம் திகதி - சுதுமலை நாவலர் வி.க. எதிர் கைதடி வளர்மதி வி.க.

22 ஆம் திகதி - இணுவில் அண்ணா வி.க. எதிர் கட்டுடை விநாயகர் வி.க.

23 ஆம் திகதி - நவாலி தென்றல் வி.க. எதிர் சுதுமலை நாவலர் வி.க.

24 ஆம் திகதி - உடுவில் ஐக்கியம் வி.க. எதிர் இணுவில் கலாஜோதி வி.க.

25 ஆம் திகதி - உடுவில் உதயசூரியன் வி.க. எதிர் கைதடி வளர்மதி வி.க.

26 ஆம் திகதி - இணுவில் அண்ணா வி.க. எதிர் இணுவில் கலாஜோதி வி.க.

27 ஆம்திகதி - நவாலி தென்றல் வி.க. எதிர் கைதடி வளர்மதி வி.க.

28 ஆம் திகதி - உடுவில் ஐக்கியம் வி.க. எதிர் கட்டுடை விநாயகர் வி.க.

29 ஆம் திகதி - உடுவில் உதயசூரியன் வி.க. எதிர் சுதுமலை நாவலர் வி.க.

## வடக்கின் பெரும் துடுப்பாட்டம் ~ 2003



வடக்கின் மாபெரும் துடுப்பாட்டத்தில் பங்கேற்ற பரி.யோவான் கல்லூரித் துடுப்பாட்ட அணியினரை படத்தில் காணலாம்.



வடக்கின் மாபெரும் துடுப்பாட்டத்தில் பங்கேற்ற யாழ். மத்திய கல்லூரித் துடுப்பாட்ட அணியினரை படத்தில் காணலாம்.




அபான்ஸ் நிறுவனத்தின் விற்பனை மேம்படுத்தல் முகாமையாளர் (எஸ்.பி.எம்.) குனேந்திரன், பரி.யோவான் கல்லூரியின் அணித்தலைவர் அகிலனுக்கு சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான பரிசாக சலவை இயந்திரத்தினை வழங்குவதனைக் காணலாம். அருகில் பரி.யோவான் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றின் அதிபர்கள் காணப்படுகின்றனர்.

## இன்றைய நாள் இனிய நாள்

**18-03-2003 - செவ்வாய்க்கிழமை**

பூரணை விரதம்

| | |
|---|---|
| மேடம் | :- வெளியூர்ப் பிரயாணம், பிரயாசை மிகுதி, வாதநீர், விஷ நீர்ப்பீடை, புத்திர மகிழ்ச்சி. |
| இடபம் | :- பயனற்ற பிரயாசை, நேத்திர ரோகம், பொதுசன பாதிப்பு, காரியனுகூலம். |
| மிதுனம் | :- சந்தோஷ மிகுதி, சிநேகலாபம், சரீர ஆரோக்கியம், பூமியால் லாபம், தனதானிய விருத்தி. |
| கர்க்கடகம் | :- இனசன கவலை, தேகசுகக் குறைவு, குறைகேட்டல், அக்கினி பயம், இல்லச்சிறப்பு. |
| சிங்கம் | :- தொழில் குறைவு, தேக பலவீனம், காரியத் திறமை, புதிய ஸ்தானம், புத்திர நன்மை. |
| கன்னி | :- காரிய சித்தி, பெரியோர் மதிப்பு, வெளியூர் பிரயாணம், தொழில் சிறப்பு, பொருள் வரவு. |

பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்

| | |
|---|---|
| துலாம் | :- நிலை மாற்றம், கொடுக்கல் வாங்கல் பிணக்கு, பிரயாணக் கஷ்டம், ஆயுத பயம். |
| விருச்சிகம் | :- காரிய சித்தி, பொதுசன மதிப்பு, எடுத்த காரியம் கை கூடுதல், வாக்கு வசீகரம். |
| தனு | :- தார புத்திர ரோக பீடை, பிரயாசை மிகுதி, தொழில் பின்னடைவு, பெரியோர் மதிப்பு. |
| மகரம் | :- தனதானிய நிறைவு, சமாதான வாழ்வு, புத்தி திறமை, களஸ்திர சுகம். |
| கும்பம் | :- இரத்த சம்பந்தமான வியாதி, புத்திர பந்துக்களினால் கவலை, சோம்பல், கோப மிகுதி. |
| மீனம் | :- காரிய வெற்றி, சந்தோஷ மிகுதி, குடும்ப மகிழ்ச்சி, சமாதான வாழ்வு. |


## சிறு விளம்பரம்

**தேவை**

மினித் திரையில், எலக்ரோனிக் துறையில் அனுபவம் உள்ள ஒருவர் தேவை. திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். உடன் நேரில் வரவும். புஸ்பாமினி, நாவலர் வீதி, ஆனைக்கோட்டை. (286)

**ராஜா** யாழ்ப்பாணம்.

சரத்குமார், மீனா, விஜயகுமார், வடிவேல் நடித்த

**மாயி**

நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30 காட்சி (சி-628)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

பிரபு, வைஜயந்தி நடித்த

**வண்ணத்தமிழ் பாட்டு**

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி

**RUSH HOUR - 2** (சி-627)

# பொய்யான வாக்குறுதிகளை வழங்கியே பதவி பிடித்தோம்!

## அநுரா பண்டாரநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

பொய்யான வாக்குறுதிகளை வழங்கியே தானும் ஏனைய அரசியல் வாதிகளும் மக்களின் வாக்குகளைப் பெற்றுள்ளதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரான அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

ஹேவாஹெட்டவில் சுதந்திரக் கட்சியின் நிர்வாகக் குழுவினருக்கு தற்போதைய அரசியல்நிலை குறித்து விளக்கமளித்தபோதே அநுரா பண்டாரநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாஸ, சந்திரிகா போன்ற அனைவருமே பொய் வாக்குறுதிகளின்பேரில் தான் ஆட்சியைப் பிடித்தார்கள். இவ்வாறான வாக்குறுதியை இப்போது மக்கள் நம்புவதில்லை.

பண்டாரநாயக்காவைத் தவிர, தனது குடும்பத்திலிருந்த அனைவரும் பொய் வாக்குறுதிகளை வழங்கியே மக்களின் ஆதரவைப் பெற்றதாகவும், இனி இவ்வாறான பொய் வாக்குறுதிகள் மக்கள் மத்தியில் எடுபடப்போவதில்லை என்றும் அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

(க)

# விடுதலைப் புலிகளின் கப்பல் மூழ்கடிப்பு விவகாரம்

# முன்னாள் கடற்படை அதிகாரிகளுடன் ஆராய்வு!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான வர்த்தகக் கப்பல், கடற்படையால் தாக்கி மூழ்கடிக்கப் பட்டது தொடர்பாக, இராஜதந்திரிகள் மற்றும் முன்னாள் சிரேஷ்ட கடற்படை அதிகாரிகளுடன், அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக ஆராய்ந்துள்ளார்.

ஜப்பானில் நடைபெறவுள்ள ஆறாவது சுற்றுப் பேச்சுக்களில் கலந்து கொள்ள - ரோக்கியோ புறப்பட முன்னர் பேணாட் குணதிலக - முன்னாள் சிரேஷ்ட கடற்படை அதிகாரிகளையும், இராஜதந்திரிகளையும் சந்தித்திருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளரின் இல்லத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பில் கடலில் இடம்பெற்ற சம்பவம் குறித்து பேணாட் குணதிலக விளக்கமளித்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட கடற்படையின் முன்னாள் நடவடிக்கை இயக்குநர் அட்மிரல் தசநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையின் பொருளாதார வலயத்தில் கடற்கண்காணிப்புப் பற்றிய சிபார்சுகளைத் தாம் முன்னரே பாதுகாப்பு மீளாய்வுக் குழுவிடம் சமர்ப்பித்திருந்ததாகத் தெரிவித்தார்.

# அதிகாரப் பகிர்வு விவகாரம் பேச்சுகளில் ஆராயப்படாது!

## ஜப்பான் செல்லும்முன் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகாரப்பகிர்வு சம்பந்தமாக இன்று ஆரம்பமாகவுள்ள பேச்சுக்களில் ஆராயப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டபோதும், பேச்சுக்களில் இவ்விடயம் ஆராயப்படுவதற்கான சாத்தியமில்லை என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அரச தரப்புப் பிரதிநிதிகள் குழுவில் இடம்பெற்றுள்ள அமைச்சர் ரவூப் ஹக்கீம்-

நேற்று அதிகாலை 1.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து ரோக்கியோவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இவர் ரோக்கியோவுக்குச் செல்ல முன்னர் செய்தியாளர்களிடம் பேசிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பாக இந்தப் பேச்சுக்களில் ஆராய்வதற்கான சாத்தியம் இல்லை. ஆனால், அதிகாரப் பகிர்வில் வரி விதிப்புத் தொடர்பான விடயங்கள் மட்டும் இந்தப் பேச்சுக்களில் விவாதிக்கப்படும்.

அத்துடன், முஸ்லிம்களைத் தனித்தரப்பாக இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்ள அனுமதிப்பது குறித்தும், அரச மற்றும் புலிகள் தரப்பிடம் இந்தப் பேச்சில் தாம் வலியுறுத்தவுள்ளதாகவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

(க)

# நீருக்கடியில் பயணம் செய்யும் ஸ்கூட்டர்களைப் புலிகள் கொள்வனவு

## பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன

விடுதலைப் புலிகள், தமது கடல் நடவடிக்கைக்களுக்காக 34 நீரடி ஸ்கூடடர்களைக் கொள்வனவு செய்திருப்பதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

டென்மார்க்கிலிருந்தே இந்த நீரடி ஸ்கூடடர்களைப் புலிகள் வாங்கியிருப்பதாகவும், நான்கு மாதங்களுக்கு முன்னர் புலிகள் இவற்றைக் கொள்வனவு செய்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நீரடி ஸ்கூட்டாகள் நீருககு அடியில் சுமார் ஒரு மணிநேரம் பயணம் செய்யக்கூடியது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புலிகள் பேச்சுவார்த்தைக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டு திரும்பிவரும் போது, கட்டுநாயக்க விமானநிலையம் ஊடாகவே இவற்றைக்கொண்டு வந்ததாகவும், இவற்றை சுங்கப் பகுதி சோதனையிடவில்லை என்றும் அச் செயதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மரணதண்டனைக்கு எதிர்ப்பு

நாட்டின் மீண்டும் மரண தண்டனை அமுலாக்கப்படுவது தொடர்பாக ஆராயப்பட்டு வருவது குறித்து தொழில்சார் தகைமையாளர்கள் கொழும்பில் கூடி ஆராய்ந்துள்ளனர்.

கொழும்புப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சாவித்திரி குணசேகர தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டோர், மீண்டும் மரணதண்டனை அமுலாக்கப்படவிருப்பதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். (க)

# கிழக்கில் பொலிஸ் அதிகாரிகள் ஒழுங்கீனமாக நடக்கின்றனர்!

## உள்துறை அமைச்சர் எச்சரிக்கை

ஒழுங்கீனமாக நடந்துகொள்ளும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய ஜோன் அமரதுங்க மேலும் கூறுகையில் -

கிழக்கு மாகாணத்திலுள்ள பொலிஸ் அதிகாரிகளின் ஒழுங்கீனங்கள் குறித்து உள்துறை அமைச்சுக்கு நிறையப் புகார்கள் கிடைத்து வருகின்றன. ஒழுங்கீனமாகவும், நேர்மையற்ற வகையிலும் பணியாற்றும் பொலிஸார் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பொலிஸார், நீதியை நிலைநாட்ட வேண்டும். நீதியை நிலைநாட்டத் தவறும் பொலிஸார் குறித்த தகவல்களைத் தமக்குப் பொதுமக்கள் தந்து உதவவேண்டும் என்றும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கேட்டுக்கொண்டார்.

(க)

# பாலாவைச் சந்திக்க ஏற்பாடு செய்க; நோர்வேயிடம் மீண்டும் வலியுறுத்து!

## முஸ்லிம் எம்.பிக்கள் வெஸ்பேர்க்கிடம் கோரினர்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடனான சந்திப்புக்கு ஒழுங்குசெய்து தரும்படி நோர்வே அரசாங்கத்திடம் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் கேட்டுள்ளனர்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வன்னியில் தங்கியிருந்தபோது - முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரைச் சந்தித்துப் பேசுவதற்குத் திட்டமிட்டிருந்தனர். இதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவதாக நோர்வே அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

ஆனால், கடந்த 10 ஆம் திகதி புலிகளின் கப்பல் - கிழக்குக் கடலில் மூழ்கடிக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட நெருக்கடியால் இந்தச் சந்திப்பு இடம் பெறவில்லை.

இதையடுத்து, மீண்டும் நோர்வேயிடம் தமது கோரிக்கையை முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்திருக்கின்றனர். நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கைச் சந்தித்து இக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

ஜப்பான் பேச்சுக்களின் பின்னர் சந்திப்புக்கான ஒழுங்குகளைச் செய்து தருமாறு இவர்கள் கேட்டுள்ளனர். சந்திப்பை எங்கு நடத்துவது என்பது குறித்து இவர்கள் கருத்து எதையும் முன்வைக்கவில்லை.

பேச்சுக்களில் முஸ்லிம்களைத் தனித்தரப்பாகக் கலந்துகொள்ள இடமளிப்பது குறித்து கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் பேசவே வாய்ப்பு ஏற்படுத்தித் தருமாறு இவர்கள் கேட்டுள்ளனர்.



பேச்சுக்குச் சென்ற புலிகளின் குழுவினரை வழியனுப்பச் சென்ற தளபதிகள் கேணல் விதுஷா, கேணல் துர்க்கா ஆகியோர் கேணல் கருணாவுடன் உரையாடுவதை முதலாவது படத்திலும், அடேல் பாலசிங்கம் ஹெலியிலிருந்து கை அசைத்து பிரியாவிடை பெறுவதை இரண்டாவது படத்திலும், வழியனுப்பச் சென்ற மூத்த தளபதிகள் பொட்டு அம்மான், கேணல் பதுமன், கேணல் பானு ஆகியோரை மூன்றாவது படத்திலும் காணலாம்.



ஜப்பானில் இன்று பேச்சுகள் நடக்கவுள்ள ஹோட்டேல் அமைந்துள்ள ஃபியூஜி மலைப் பகுதியை முதலாவது படத்திலும், அஸி ஏரியின் ஊடான ஹோட்டேலின் தோற்றத்தை இரண்டாவது படத்திலும், பேச்சுக்கள் நடக்கும் ஹோட்டேலின் முகப்புத் தோற்றத்தை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# போதனா வைத்தியசாலையிலிருந்து சடலங்களை அகற்றுவதில் சிரமம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையிலிருந்து இறந்தவர்களின் சடலங்களை இராணுவ நிலைகளினூடாக எடுத்துச்செல்வதில் பொது மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இராணுவத்தினரின் சோதனைக் கெடுபிடிகளாலே - பொதுமக்கள் இந்தக் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

வைத்தியசாலை பிரேத அறையிலிருந்து இறந்தவர்களின் சடலங்கள் கடந்த காலங்களில் வைத்தியசாலையின் முன்வழியாகவே எடுத்துச் செல்லப்பட்டுவந்தன.

கடந்த இரு வருடங்களாக வைத்தியசாலைக்குப் பின்புறமாக அமைந்துள்ள மணிக்கூட்டு வீதியூடாக இறந்தவர்களின் சடலங்களைக் கொண்டு செல்வதற்கு வைத்தியசாலை நிர்வாகம் ஒழுங்கு செய்திருந்தது. இராணுவ பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள இந்த வீதியினூடாகச் சடலங்களை எடுத்துச் செல்லும்போது இராணுவத்தினரின் அனுமதிபெற வேண்டியுள்ளது.

விசாரணைகள் முடிந்து இறந்தவர்களின் சடலத்தினை உரிய நேரத்தில் அடக்கம் செய்ய முயற்சிகள் செய்யப்படும்போதும் சிலவேளைகளில் உரியநேரத்தில் சடலங்களை எடுத்துச்செல்ல முடியாதிருப்பதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மரண விசாரணை முடித்துச் சடலங்களை எடுத்துச்செல்வதற்கு மேற்பார்வையாளர் அலுவலகத்தில், இராணுவ பாதுகாப்பு நிலைகளூடாகச் செல்வதற்கான பாஸ் பெற வேண்டியுள்ளது. பாஸ்பெற்ற பின்னர் மேற்பார்வையாளர்கள் - இராணுவத்தினருக்கு அறிவிக்கவேண்டும். பார்வையாளர்கள் - சடலங்களை ஏற்றுவதற்கு மணிக்கூட்டு வீதிக்குச் செல்வதற்காக வாகனங்களுடன் மணித்தியாலக்கணக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது.

இராணுவத்தினர் பெயர்களைப் பதிவுசெய்து - சடலம் ஏற்றச்செல்லும் வாகனம், பிரேதபெட்டி என்பனவற்றைக் கடுமையாகச் சோதனை செய்தபின்பே உட்செல்ல அனுமதிக்கின்றனர்.

இதேபோல சடலத்தினை எடுத்து வரும்போதும் - பிரேதப்பெட்டி உட்பட வாகனம் அனைத்தும் கடுமையான சோதனையின் பின் வெளியே செல்ல அனுமதிக்கப்படுகின்றது.

இதனால் - இறந்தவரின் தகனக் கிரியைகளை உரியநேரத்தில் செய்ய முடியாதநிலை ஏற்படுவதாகத் தெரியவருகின்றது. (ச)

## 'போரூட்' நிறுவனத்தின் ஆதரவில் எழுவைதீவில் அபிவிருத்திப் பணி!

(மானிப்பாய்)

போரூட் நிறுவனம் எழுவைதீவுப் பகுதியில் பல லட்ச ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

எழுவைதீவைச் சேர்ந்த 47 வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்குப் புதிதாக வீடுகளை அமைத்துக்கொள்ள தலா 38 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

மேலும் - அங்குள்ள 25 குடும்பங்களின் சிதைந்துபோன குடியிருப்புக்களைப் புனரமைத்துக் கொள்ள - தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

25 புதிய கிணறுகளை அமைத்துக்கொள்ள- தலா 7500 ரூபாவை போரூட் நிறுவனமே வழங்கி உள்ளதுடன், பொதுக்கிணறு ஒன்றையும் போரூட் நிறுவனம் அமைத்துக் கொடுத்துள்ளது. (100)

### பாடசாலைகளுக்கு கட்டடம்

(நவிண்டில்)

பொதுக்கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செம்பியன்பற்று றோ.க.த பாடசாலை, செம்பியன்பற்று அ.த.க பாடசாலை, மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, அம்பன் அமெரிக்கன் மிஷன் ஆகிய பாடசாலைகளுக்குக் கட்டடம் அமைத்துக் கொடுக்க மாகாணக் கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளதாக- வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வே.த.செல்வரட்ணம் தெரிவித்துள்ளார்.

## மூன்றுமாடி கட்டடத்தை பூர்த்திசெய்ய நிதியுதவி வழங்குமாறு கோரிக்கை!

(மானிப்பாய்)

மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிதாக நிறுவுவதற்கென திட்டமிடப்பட்டுள்ள மூன்று மாடிக் கட்டடத்திற்கு நிதியுதவி வழங்கி உதவுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஊடாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகப் பாடசாலை அதிபர் அருட் சகோதரி நெவில்ஸ் தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியினைக்கொண்டு மேற்படி மாடிக் கட்டடத்துக்கான அடித்தள வேலைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், மேற்கொண்டு கட்டட வேலையைத் தொடர்வதற்கு நிதி இல்லாமையினால் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (100)

## தனியார் மயமாக்கலை எதிர்த்து; அரச, வங்கி ஊழியர் போராட்டம்!

(கொழும்பு)

அரசாங்க வங்கிகள் உட்பட, அரச நிறுவனங்களைத் தனியார் மயமாக்குவதற்கு எதிராகவும், அரச ஊழியர்களுக்குச் சம்பளத்தை 4 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க வேணடும் எனக்கோரி - அரசாங்க வங்கி ஊழியர்களும், அரசாங்க ஊழியர்களும் எதிர்வரும் 26 ஆம் திகதி வேலை நிறுத்தமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த வேலை நிறுத்தத்தில் 86 தொழிற் சங்கங்கள் ஈடுபடவுள்ளன.

அரசாங்க வங்கிகள், புகையிரதத் திணைக்களம், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சுகாதாரத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், அரசாங்க அச்சகம், அரசாங்க கைத்தொழில் திணைக்களம், மின்சார சபை போன்ற பல அரசாங்கத் திணைக்களங்களிலுள்ள ஊழியர்கள் இவ் வேலை நிறுத்தத்தில் பங்கேற்கின்றன.

### குன்றும் குழியுமாக காணப்படும் வீதி

(வடமராட்சி கிழக்கு)

மந்திகை - சிலையடிச் சந்தியிலிருந்து பருத்தித்துறை 14 ஆம் கட்டைச்சந்தி வரையான பிரதான வீதி குன்றும் குழியுமாக இருப்பதால், போக்குவரத்துக்குப் பெரும் சிரமம் ஏற்படுகின்றது.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படாமையால் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (17)

## இரத்தினக் கல் அகழ்வோரை விரட்ட பொலிஸ் துப்பாக்கிச்சூடு

குருவிட்ட பகுதியில் சட்டவிரோதமாக இரத்தினக் கற்கள் அகழ்வு வேலையில் ஈடுபட்ட சுமார் 3 ஆயிரம் பேரைக் கலைப்பதற்குப் பொலிஸார் வானத்தை நோக்கிச்சுட்டனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தை அடுத்து, பொலிஸாருக்கும்- சட்டவிரோதமாக இரத்தினக் கற்களை அகழ்வோருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டதெனவும், இதனால் பலர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப்பகுதியில் அமைதியை நிலைநாட்டுவதற்காகப் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

### அதிபர்களுக்கான விசேடகூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்விவலயப் பாடசாலை அதிபர்களுக்கான விசேடகூட்டம் இன்று காலை 9 மணிக்கு வலய மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ச).

## புலிகள் இயக்கத்தில் இணையச் சென்ற மாணவி பெற்றோரிடம் ஒப்படைப்பு

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணையச்சென்ற பாடசாலை மாணவியொருவர்- ஆசிரியர்கள் முன்னிலையில் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சாவகச்சேரி மாவடிப் பகுதியைச் சேர்ந்த மாணவியொருவரே இவ்வாறு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டவராவர்.

18 வயதிற்குட்பட்ட சிறுவர்களைத் தமது அமைப்பில் இணைப்பதில்லை என்ற தீர்மானப்படி, அந்த மாணவியைப் பெற்றோரிடம் ஒப்படைத்ததாகத் தென்மராட்சி கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் செ.சிறிநாத் தெரிவித்துள்ளார்.

### விஞ்ஞான ஆய்வுகூடத்தில் திருட்டு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் விஞ்ஞான ஆய்வு கூடத்தில் - திருடர்கள், விஞ்ஞான உபகரணங்களைத் திருடிச்சென்றுள்ளதாகப் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே.சி.ஹப்பு ஆராச்சி தலைமையில் விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (17)



யாழ். ஆனைக்கோட்டை அ.மி.த.க. ஆரம்ப பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அதிபர் சி. நாகையா தலைமையில் நடந்தபோது - பிரதம விருந்தினராக வருகைதந்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் குத்துவிளக்கு ஏற்றுவதைப் படத்தில் காணலாம்.



நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் பான்ட் வாத்தியக்குழுவினரைப் படத்தில் காணலாம். (113)



அரியாலை பண்ணிசை மன்றம் அண்மையில் கொண்டாடிய தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் சண்முகதாஸ் மற்றும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட கவிமணி காரை.எம்.பி.அருளானந்தன், நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த ரவீந்திரன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பிக்கின்றனர்.

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்

பெயர் : பி.நிலோஜினி

முகவரி: 52/2, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------

முகவரி :------------------------

பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------

பெற்றார் ஒப்பம்

# செவ்வாயில் நீரோட்டத் தடயங்கள்

செவ்வாய் கிரகத்தில் காணப்படும் சில ஆழமான நீண்ட தடயங்கள் மற்றும் பள்ளத்தாக்குகளின் சுவர்கள் அங்கு நீரோட்டம் உள்ளதை நிரூபிக்கின்றன. செவ்வாயின் மிகப்பெரிய எரிமலையான ஒலிம்பஸ் மலைககு அருகில் இத்தடயங்கள் காணப்படுகின்றன.





செவ்வாய்க் கிரகத் தரையின்கீழுள்ள பனிப்படலங்கள் சில சமயம் உருகி, இந்தத் தடயங்கள் வழியாகக் கீழ் ஒடலாம் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். இதனால் அங்கு உயிரினங்கள் இருக்கவே செய்யும் என்கின்றனர் அவர்கள்.

ஒரேகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்களின் கருத்துப்படி - இத்தகைய தடயங்கள் புதிதாகவும் தோன்றுவதாகக் கூறுகின்றனர். செவ்வாய்த் தரையமைப்பின் கீழ ஏற்படும் வெப்பநிலை மாற்றம்- அடிமட்ட பனிப்படலங்களை உருகச்செய்து, வழிந்தோடச் செய்வதே இதற்கான காரணமாக இருக்கலாம் என்கின்றனர் இவர்கள். சில நீரோட்ட தடயங்கள் புதிதாகவும் தோன்றியுள்ளனவாம். இரண்டு மாத இடைவெளியில் எடுக்கப்பட்ட படங்களில் இந்தப் புதிய தடயங்கள் தெரிவதாகவும், இது செவ்வாய்க் கிரகத்தின் நிலப்பரப்பில் படிப்படியான மாற்றம் நிகழ்வதையே காட்டுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். புதிர்க் கிரகத்தின் மர்மங்கள் இன்னும் அவிழ்க்கப்படாமல் தொடர்கின்றன.

# விண்கலத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்க நாஸா திட்டம்

கொலம்பிய விண்கல அனர்த்தத்தினால் தடைப்பட்டுப் போய் விட்டிருந்த நாஸாவின் விண்வெளிப் பயணத்திட்டங்கள் இவ்வாண்டு இறுதியில் மீளத்தொடங்கவுள்ளன. கொலம்பியாவில் ஏற்பட்ட தவறுகள், தொழில்நுட்ப ஓட்டைகள் என்பன குறித்து நடாத்தப்பட்ட விசாரணைகளில் பல முக்கிய விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவை எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் என நாஸா அதிகாரிகள் கூறுகின்றனர்.



**S.S.P (Space shuttle Programme)** என அழைக்கப்படும் விண்கலத் திட்டம் மீண்டும் அதன் தடத்தில் ஏறிவிடும் என நம்பிக்கை தெரிவிக்கிறார் நாஸா அதிகாரியொருவர்.

# பிரிட்டனின் மிகப்பெரிய ஆய்வுகூடம் உருவாகிறது

இங்கிலாந்தில் மிகப்பெரிய ஆய்வுகூடமான Diamond Synchrotron இன் கட்டட நிர்மாணப் பணிகள் கடந்த புதனன்று ஆரம்பமாகிவிட்டன. ஒக்ஸ்போர்ட் ஷயரில் இக்கட்டடம் அமையப்பெற்று வருகிறது. இந்த ஆய்வுகூடம் பூமியில் உயிரினங்களின் தோற்றம் எவ்வாறு ஆரம்பித்தது என்பது பற்றியே பிரதானமாக ஆராயவுள்ளது. சக்கரவடிவமாக இந்த பிரமாண்டக்கட்டடம் அமையவுள்ளது. 2006 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகும்.





# தலிபான் திரைக்கதாசிரியர் தயாரிப்பாளர் மீது குற்றச்சாட்டு

'தலிபான்களிடமிருந்து தப்புதல்' (Escape from Taliban) என்ற திரைப்படத்தின் கதாசிரியரான சுஷ்மிதா பந்தோபாட்யாய, தனது திரைப்படம் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார். பெரும் ஹிட்டாகியுள்ள இப்படத்துக்காகத் தனக்கு ஒப்புக்கொள்ளப்பட்ட சம்பளத்தொகையும் முழுமையாகத் தரப்படவில்லையெனக் குற்றஞ் சாட்டியுள்ளார்.


மனிஷா

கொல்கத்தாவில்- தான் சந்தித்த ஆப்கான் இளைஞரைக் காதலித்து, அவருடன் 1989 இல் ஆப்கான் சென்றவர் சுஷ்மிதா. அங்கு தனது அனுபவங்கள், தலிபான் ஆட்சியில் நடந்த கொடூரங்கள், பின்னர் 1995 இல் தான் இந்தியாவுக்குத் தப்பி வந்த விதம் ஆகிய உண்மைச் சம்பவங்களைத் தொகுத்து "ஆப்கானின் வங்காள மருமகள்" என்ற சுயசரிதை நூல் ஒன்றை எழுதினார். பிரபலமான அந்நூலே தற்போது திரைப்படமாக எடுக்கப்பட்டுள்ளது. திரைப்படத்தில் இவரின் பாத்திரமாக நடிகை மொனிஷா கொய்ராலா நடிக்கிறார்.

திரைப்படத்தில் கதை மாற்றப்பட்டு, தனது கணவன் தன்னைக் கொடூரமாக நடத்தியதாகக் காட்டுகின்றனர். அவருக்கு மற்றோர் மனைவியும் இருப்பதாக விபரிக்கின்றனர். இவை எனது மூலக்கதையில் இல்லை. இதைவிடக் கதைக்காக எனக்கு 75 ஆயிரம் ரூபாவே தந்துள்ளனர் என்கிறார் சுஷ்மிதா.

ஆனால்- படத்தயாரிப்பாளர் அசோக் கெஹ்ம்கா- சுஷ்மிதா ஒப்புக்கொண்ட தொகை 25 ஆயிரம் ரூபாவே. நாம்தான் 50 ஆயிரம் ரூபாவைக் கூட்டிக்கொடுத்தோம் என்கிறார். திரைப்படக்கதையை சுஷ்மிதா பார்த்து அனுமதித்த பின்பே, திரைப்படத் தயாரிப்பு ஆரம்பிக்கப்பட்டது என்றும் அவர் கூறுகிறார். எது எப்படியோ, படம் உலகம் முழுவதும் வெளியாவதற்கு முன்பு கதையில் சில மாற்றங்கள் செய்ய இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. சினிமாவில் இதெல்லாம் சகஜமப்பா...!

# விண்வெளிக்கு மனிதனை சீனாவும் அனுப்புகிறது

இவ்வருட இறுதியில் சீனாவும் விண்வெளிக்கு மனிதனை அனுப்புகின்றது. சென்லோங் என்ற இந்தப் பயிற்சி பெற்ற விமானி, விண்வெளிப் பயிற்சிகளை 1996 முதல் மேற்கொண்டு வருகிறார். இவ்வருட ஒக்டோபரில் சென் சோஹ்-5 என் விண்கலத்தில் இவர் புறப்படவுள்ளார். இதன் மூலம் விண்வெளியில் மனிதனை அனுப்பும் மூன்றாவது நாடாகச் சீனா வந்துள்ளது.



இந்தப் பயணத்தின்போது இவருடன் வேறு ஓர் விண்வெளி வீரரும் செல்லலாம் என எதிர்பார்க்கப்பட்டபோதும், தற்போது சென்லோங் மட்டுமே விண்வெளி செல்வார் என அதிகாரிகள் கூறுகின்றனர். பத்திரமாகத் திரும்புவாரா?




# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்

## அங்கம் – 01

## கிரிஃபித்



இயக்குநர் எரிக் வான் ஸ்ட்ரோஹிம் குறிப்பிட்டதுபோல் மிகச்சாதாரணமாகத் திகழ்ந்த ஒரு பொழுதுபோக்கு மீடியாவை முதன்முதலாக மதிப்புவாய்ந்த கலையாகப் பரிணமிக்கச் செய்த பெருமை கிரிஃபித்தையே சாரும். இந்தவகையில், இவருடன் வேறு எவரையும் இணையாகச் சொல்ல முடியாது!

தென்னமெரிக்கப் பகுதியின் கெண்டக்கி நகரில், 1875 இல் பிறந்து, வளர்ந்த கிரிஃபித இளமைக் காலத்தில் பலவித வேலைகளில் ஈடுபட நேர்ந்தது.

1897 ஆம் ஆண்டு மெவ்வோர்ட் ஸ்ரொக் (MEFFORT STOCK) நிறுவனத்தில் ஒரு நாடக நடிகராகச் சேர்ந்த பொழுதுதான் கிரிஃபித்துக்குக் கலையுடனான முதல் தொடர்பு ஏற்பட்டது. அந்த நேரத்திலிருந்து மரணம் வரையிலும் கிரிஃபித் உயர்ந்த இலக்கியத்தில் தீவிர ஆர்வம் கொண்டிருந்தார். நடுவே சிறுகதைகள், கவிதைகளையும் எழுதினார். 1907 இல் ஏ ஃபூல் அன்ட் எ கேர்ள் (A FOOL AND A GIRL) என்கிற நாடகத்தை எழுதி, நாடகக் கம்பெனி ஒன்றுக்குக் கொடுத்தார். இந்த நாடகத்தின் தோல்வி- கிரிஃபித்தை மனம் உடையச் செய்தது. இந்தச் சம்பவம்தான் கிரிஃபித்தை நாடகத்துறையிலிருந்து சினிமாவுக்கு விரட்டியது எனலாம். தோமஸ் அல்வா எடிசனின் ஸ்ரூடியோவிற்கு முதன்முதலாக ஒரு திரைக்கதை - வசனத்தை விற்கவருவது வரையிலும் கிரிஃபித் ஒரு திரைப்படத்தைக்கூடப் பார்த்திருக்க வில்லை!

வந்த இடத்தில் அவரது திரைக்கதை நிராகரிக்கப்பட்டது. ஆனால், எடிசனின் உதவியாளர் எட்வின் எஸ்போர்ட்டர்- கிரிஃபித்தை 'ரெஸ்க்கியூட் ஃபுரம் அன் ஈகிள்ஸ்ற் நெஸ்ட்' (RESCUED FROM AN EAGLE'S NEST) என்கிற படத்தின் மூலம் 1907 இல் ஒரு நடிகராக மாற்றிவிட்டார். தொடர்ந்து 'அமெரிக்கன் பயோகிராஃப்' (AMERICAN BIOGRAPH) தயாரிப்பு நிறுவனத்துக்குத் திரைக்கதைகளை விற்பனை செய்யவும் அவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தச் சூழ்நிலையில்தான் 1908 ஆம் ஆண்டு முதன்முதலாக ஒரு திரைப்படத்தை இயக்கும் வாய்ப்பு கிரிஃபித்துக்குக் கிடைத்தது. தி அட்வென்சர்ஸ் ஒஃவ் டோலி (THE ADVENTURES OF DOLLY) இவர் இயக்கிய முதல் படம்! இது ஒரு சண்டைப் படம். தொடர்ந்து ஐந்து வருடங்களுக்குள்ளாகக் கிரிஃபித் ஐந்நூறு படங்களை இயக்கினார். இவையெல்லாம் குறிப்பிட்டுக் கூறும்படியான படைப்புக்கள்ல்ல என்றாலும், மற்றைய திரைப்படங்களுடன் ஒப்பிடும்பொழுது ஒழுங்கான வடிவமும், கலைத்தன்மையும் கொண்டு விளங்கின. இந்தத் துண்டுப்படங்கள் அதற்குள்ளாகவே கிரிஃபித்தை உலகம் முழுவதும் அறிந்துகொள்ளச் செய்தன.

அவசரமும், பொறுப்பற்றதன்மைமிக்க படத் தயாரிப்பும், மிகவும் புராதனமான கதையமைப்புகளும், வரைமுறையோ, ஒழுங்கு வடிவமோ இல்லாத அமைப்புக்களும் அன்றைய படத்தயாரிப்பின் வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கவில்லை.

கவனமான கமரா நுட்பமும், யதார்த்தமான கதைப்பொருளும், பார்வையாளர்கள் திருப்தியுடன் ஒப்புக்கொள்ளும் அரங்க அமைப்புகளும்- படத் தயாரிப்புச்செலவைப் பெருமளவு அதிகரிக்கச் செய்துவிட்டிருந்தன. இந்தச் சூழலில்தான், இயக்குநர் கிரிஃபித் அறிமுகமானார். அந்த நேரத்திலேயே சினிமாவை வெகுகவனத்துடன் கையாளக்கூடிய, கலையுணர்வுகொண்ட பலர் இயக்குநர்களாக அறிமுகமாகியிருந்தனர் என்பதும் உண்மையே.

ஆனால், திரைப்படத்தின் சரியான வடிவமாற்றம் கிரிஃபித்திலிருந்துதான் தொடங்குகிறது. எனவே, அவர்தான் சரியான சினிமாவின் முதல் இயக்குநர் என்ற பெருமையைப் பெறுகிறார்.

வழக்கமான காட்சியமைப்புகளும், கதைகளும் திரைப்பட ரசிகர்களை அலுப்படையச் செயதிருந்ததும் ஒரு காரணம் எனலாம். கிரிஃபித் இயக்குநராக அறிமுகமாவதற்கு இடைப்பட்ட பதினான்கு வருடகாலத்துக்குள் திரைப்படத்துறைக்குத் தேவையான மிகவுயர்ந்த தரத்திலான பொருட்களும் அறிமுகமாகி விற்பனைக்கு வந்தன. முன்னைய தன்மையைவிட நுட்பம் மிகுந்த கமராக்களும், தரமான, முன்னேற்றமடைந்த பிலிம்சுருள்களும், சக்தி வாய்ந்த மின்சாரவிளக்குகளும் திரைத்தொழிலில் அனுபவம்வாய்நத கலைஞர்கள் மற்றும் ஊழியர்களும் ஏராளமாகப் பெருகிவிட்டிருந்தனர்.

எனவே, தம்மால் இயன்றளவு வழக்கமான சினிமாவின் இயல்புகளை மாற்ற வேண்டுமென்று அவர் விரும்பினார். இதன் உட்பொருள்- தன்னுடைய தனித்தன்மையை வெளிப்படுத்தவேண்டும் என்பதே! எனவே சினிமாத்துறையில் அவர் ஒரு புதிய அகராதியையே படைக்க நேர்ந்தது.

(தொடரும்.....)

# திரை விமர்சனம்



## FIVE STAR

மணிரத்தினத்தின் பாசறையில் வளர்ந்த சுசி கணேசனின் இயக்கத்தில் உருவானது five star. நட்பை மையமாகக்கொண்ட திரைப்படம். வித்தியாசமான முறையில் விறுவிறுப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

கல்லூரியில் பிரபு, இளங்கோ, சுந்தர், பிரியா, இந்திரா என்ற ஐந்து நண்பர்கள். கல்லூரிப் படிப்புக்குப் பின்னரும் நட்பைத் தொடர்வது என்ற உறுதியுடன், ஒரே அலுவலகத்தில் பணிக்குச் சேர்கின்றனர். ஆனால் இளங்கோ, எதற்கெடுத்தாலும் கட்டுப்பாடு விதிக்கும் தந்தையினால் வளர்க்கப்பட்டவன். கிராமத்துக்கு வரவழைக்கப்பட்டு, விருப்பத்திற்கு மாறாக அவனது மைத்துனியையே திருமணம் செய்து வைக்கப்படுகிறான். இச்சம்பவத்திற்குப் பின்னர் மனம் விரக்தியடைந்து சென்னை திரும்பும் அவன், பம்பாயில் வேலை கிடைத்துள்ளதாகக் கூறிச் சென்றுவிடுகிறான். அவன் பற்றி பின்னர் தகவல் ஏதும் இல்லை. எனினும், ஒரே அலுவலகத்தில் பணியாற்றும் ஏனைய நான்கு நண்பர்களும், இளங்கோ தன் மனைவியுடன் பம்பாயில் மகிழ்ச்சியாக இருக்கிறான் என நம்பி விடுகின்றனர்.

சில வருடங்கள் கழித்து ஒரேவீட்டில் ஒன்றாகவே தம் குடும்பங்களுடன் வசிக்கும் அந்த நான்கு நண்பர்களில், திருமணமாகாத பிரபு - ரயில் பயணம் ஒன்றில் இளங்கோவின் மனைவியைத் தற்செயலாகச் சந்திக்கிறான். எனினும், அவள் இளங்கோவின் மனைவி என்று தெரியாதநிலையில், அவள் மீது காதல் கொள்கிறான். இறுதியில் உண்மை தெரிகிறது. எனினும் இளங்கோவின், மனைவி இந்த நண்பர்களுடன் ஒருத்தியாக அவர்களின் வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்க்கப்படுகிறாள். இளங்கோவிற்கு என்று ஒதுக்கப்பட்ட அவ்வீட்டின் அறையில் அவள் தங்க வைக்கப்படுகிறாள். தொடர்ந்து இளங்கோவை தேடிப் பிரபு வெளிநாடு செல்வதும், அங்கு அவன் வெள்ளையினப் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்திருப்பது கண்டுபிடிக்கப்படுவதும், அதைச் சென்னையில் உள்ள அவனின் மனைவிக்குச் சொல்லமுடியாது பிரபு திணறுவதும் திரைப்படத்தின் உச்சக்கட்டக் காட்சிகள்; விறுவிறுப்பாகச் சொல்லப்பட்டுள்ளன.

சினிமாத்தனமில்லாத, போலித்தனமில்லாத வகையில் நட்பைச் சாதாரணமாக எம்மத்தியில் நடக்கும் ஒரு நிகழ்வாகக் காட்டியதில் சுசி கணேசன் வெற்றி பெற்றுள்ளார்.

இளங்கோவின் மனைவியாக நடிக்கும் கனிகாவின் நடிப்பு five star ஐ six star ஆக்குகின்றது.

திரைக்கதை, கதை சொல்லப்படும் பாங்கு, ஒளிப்பதிவு என்பன மிகவும் பாராட்டப்படக்கூடிய வகையில் அமைக்கப்பட்டிருப்பது இப்படத்தில் சிறப்பாகும்.

அநுராதாவினதும், அவர் கணவன் பரசுராம் சிறீராமினதும் பாடல்களுக்கான இசை மிக வேகமானதாகத் துள்ளிசையாகவே திரைப்படம் முழுவதற்கும் இருக்கின்றது. "திருதிருடா" பாடல் மட்டும் மனதில் பதியக்கூடியவாறு அமைந்துள்ளது. துஷி.

# சிலந்திக்கடியால்



ஒரு காலத்தில் துள்ளிசை நிகழ்ச்சிகளில் கொடி கட்டிப்பறிந்த அமெரிக்கப் பாடகரான மைக்கல் ஜக்சன் தற்போது இசை நிகழ்வுகளில் கலந்துகொள்வதை அடிக்கடி கடைசி நேரத்தில் ரத்து செய்கிறார். இதனால் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு - இவர் மில்லியன் டொலர் கணக்கில் நட்டஈடு கட்டவேண்டிய நிலையில் உள்ளார்.

கடந்த புத்தாண்டையொட்டி நடைபெறவிருந்த இசைநிகழ்வை- ஜக்சன் இறுதிநேரத்தில் ரத்துச் செய்துள்ளதால், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் 21 மில்லியன் டொலர் நட்டஈடு கேட்டு வழக்குத்தாக்கல் செய்துள்ளார். முற்பணம் வாங்கியும் ஜக்சன் நிகழ்வுக்கு வரவில்லை எனக் கூறப்படுகிறது. நிகழ்ச்சிக்கு வராமைக்குக் காரணம்- அன்று தனக்குச் சிலந்தி ஒன்று கடித்தமையே என்கிறார் ஜக்சன். எனினும் 5 மில்லியன் டொலர் நட்டஈடு கட்ட நீதிமன்று ஜக்சனுக்கு உத்தரவிட்டுள்ளது.

## 5 மில்லியன் டொலரை இழந்த ஜக்சன்

# வாரம் ஒரு யோகாசனம்

## ஹலாசனம்

கற்றுத்தருபவர்
**மா.மகாநேசன்** (கரவெட்டி)

அமர்ந்து அப்படியே மல்லாக்காகப் படுக்கவேண்டும். கைகள் இரண்டும் பக்கவாட்டில் உள்ளங்கைகள் தரையில் பதிந்திருக்க வைக்கவேண்டும். கைகள் தொடையில் ஒட்டியிருக்க வேண்டும். பின்னர் கால்களை விறைப்பாக்கி, முழங்கால்களை மடியாமல் மெலுவாக மேலே உயர்த்தி, பின்புறமாகத் தரையில் படியச் செய்யவேண்டும். சிறிது நேரம் இந்த நிலையில் இருந்த பின், படிப்படியாக முதல்நிலைக்கு வரவேண்டும். இந்த ஆசனம் செய்யும் சமயம்- கால்களை மேலே தூக்கும்போது மூச்சை உள்ளிழுக்க வேண்டும். கால்கள் தரையைத் தொடும்போது மூச்சை வெளியே விடவேண்டும். இவ்வண்ணம் 10 தடவைகள் செய்தால் போதுமானது.

## ஹலாசனத்தின் நன்மைகள்



இவ்வாசனத்தின் மூலம் சுளுக்கு, வாதநோய், கீழ்வாதம் போன்ற முக்கிய நோய்களைக் குணப்படுத்தலாம்.

முதுகெலும்பு சீராக இயங்கும்.

கூடிய தசைகள், பெருந்தொந்திகள், தொடையின் கனம் என்பன குறைவடைந்து, இரத்தோட்டம் சுறுசுறுப்பு அடைவதனால் உடல் இளமைத் தோற்றம் பெறும்.

# குழந்தை பேசும் மொழி உங்களின் கைகளிலேயே!

(சென்றவாரத் தொடர்ச்சி)



இங்கே சகோதரப்போட்டி ஏற்பட்டுள்ளது. பெற்றோரின் அன்பு, அவதானம், தன்னில் இல்லாது- தங்கையில் அதிகமாகவுள்ளது. தன்னில் அதிகமான அன்பு முன்போல் இல்லை என்று சிந்திக்கத் தொடங்கும். இது மிகவும் கஷ்டமான ஒன்று. இதைத் தாங்க அப்பிள்ளையால் முடியாது. ஆகவே மற்றொரு பிள்ளை பிறந்ததும் முதற்பிள்ளை தனது தம்பியை அல்லது தங்கையை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அப்பிள்ளையை ஆயத்தப்படுத்த வேண்டும்.

இரண்டாவது பிள்ளை பெறும்பொழுது செய்யும் ஆயத்தங்களில், முதற்பிள்ளையை ஆயத்தப்படுத்த வேண்டும். இவ்வாறு செயற்பட்டால்- முதற்பிள்ளைக்கு ஏற்படும் மனத்தாக்கத்தைக் குறைத்துக்கொள்ளலாம். முதற்பிள்ளைக்கு முன்பு கொடுத்த அன்பு, அவதானம் குறையாத விதத்தில் பெற்றோர் நடமாடவேண்டும். சகோதரப்போட்டி குழந்தையில் ஏற்பட அதிகம் இடம் கொடுத்தால், அது பிற்காலத்தில் பழிவாங்கும் குணத்தை உருவாக்கலாம். ஆகவே, பிறந்த குழந்தையைக் கவனிப்பதுடன் நின்றுவிடாமல், பெரிய பிள்ளையையும் கவனிக்கத் தவறக்கூடாது.

இந்த வயதிலுள்ள பிள்ளைகள் அதிகமாகக் கற்பனை உலகில் சஞ்சரிப்பர். கற்பனைக் கதைகளை உருவாக்குவர். இந்த வயதில் கதைகள் கூறுவதைக் கேட்க மிகவும் விரும்புவர். ஆகவே, பெற்றோர் கதைகள் சொல்லவும் வேண்டும். அதேபோல் - பிள்ளையின் மனநிலைக்கு ஆயத்தமும் செய்தல் வேண்டும். இந்த வயதிலுள்ள பிள்ளைகள உண்மையான நிகழ்வுகளையும், கற்பனைப் பண்ணியவற்றையும் கலந்துகூறுவர். அதனால், பிள்ளை பொய் சொல்கிறதெனப் பெற்றோர் கலவரப்படுவர். பிள்ளை பொய் கூறவில்லை. கற்பனையையும், உண்மை நிகழ்வையும் கலந்து கூறுகின்றது. உதாரணமாக - யேசு போனார், பபாவும் போச்சுது என்று கூறும். இங்கு பபா போனது என்பது எமக்குப் பொய்யாகத் தோன்றும். பிள்ளை கற்பனையில் உள்ளதையே கூறியது. மரத்தில், றபரில் செய்த மிருகங்களைப் பிள்ளைக்கு விளையாடக் கொடுத்தால்- அதற்கு உணவு தீத்துவர், குளிப்பாட்டுவர். இது விளையாட்டுப் பொருள். உணவு உண்ணாது என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியும்.



ஆனால், இந்த வயதிலுள்ள பிள்ளையால் விளங்கிக்கொள்ள முடிவதில்லை. இதை நாம் புரிந்து கொள்ளப் பழகவேண்டும்.

இவ்வயதில் வீட்டில் பல மொழிகளைப் பேசினால், அந்த மொழிகளை மிகவும் இலகுவாகப் பேசப்பழகிவிடும். இதே போன்று மொழிநடை, பாவிக்கும் சொற்களை வீட்டிலும், வெளியிலும் கேட்பதை அப்படியே சொல்லப்பழகும். வீட்டில் பெற்றோர் ஒருவரோடு பேசும்போது எப்படிப்பட்ட சொற்களைப் பாவிக்கின்றோமோ - அதை அப்படியே பிள்ளையும் சொல்லப் பழகும். இரண்டு மூன்று வயதில் கதைக்கப்பழகும். அங்கும் இங்கும் ஓடப்பழகும். உலகைப்பற்றிய அறிவு விரிவடையத் தொடங்கும். ஆகவே காண்பதைத் தொட்டு, பிடித்தப் பார்த்து ஆராயத்தொடங்கும். தன்னைப்பற்றி இருக்கும் அறிவும் வளரத் தொடங்கும். தன்னால் செய்யகூடியது, செய்ய முடியாததைச் சிறிது சிறிதாக இந்த வயதில் அறியத்தொடங்கும்.

குழந்தைக்கு நான்கு, ஐந்து வயதுக்கு இடைப்பட்ட நிலையை அடையும்போது - இதற்கு முன்பு வீட்டிலுள்ளவர்களோடு மட்டும் பழக்கிய பிள்ளை- இப்போது சமுதாயத்தில் வேறு நபர்களுடன் பழகத்தொடங்கும். அதாவது, பாலர் பாடசாலையில் மற்றவர்களோடு பழகத்தொடங்கும்.

இந்த வயதில் சமவயதுள்ள பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடப்பழகுகின்றது. இதற்கு முன்பு தனிமையில், தான் மட்டும் விளையாடியது. அதாவது, இரு பிள்ளைகளை விளையாவிட்டால், இரண்டு பிள்ளைகளும் தனித்தனியே விளையாடத் தொடங்கும்.

இதேபோன்று தாயுடன் அதிகமாக இருந்துவிட்டு, பாடசாலைக்குச் செல்லத்தொடங்கியதால் இது பிள்ளையின் மனதுக்குக் கடினமான ஒன்றாகும். சில பிள்ளைகளுக்கு மிகவும் கஷ்டமாகவும், சில பிள்ளைகளுக்கு அவ்வளவு கஷ்டமில்லாமலும் இருக்கும். இதற்குக் காரணம்- இதற்கு முன்பு ஏற்படும் பிரிவு நல்ல விதத்தில் நடந்திருந்தால் இது இலகுவாக இருக்கும். நல்ல விதத்தில் பிரிவு ஏற்படாதிருந்தால் கஷ்டமாக இருக்கும்.

முதற்பிரிவு என்பது குழந்தை தாயின் வயிற்றிலிருந்த பிறந்ததும் ஏற்படுவது. இரண்டாவது பிரிவு- தாய்ப்பால் குடிப்பதை நிறுத்திய நேரத்தில் ஏற்பட்டது. இரண்டு பிரிவிலும் ஏற்பட்ட அனுபவங்கள் தாய்க்கும் பிள்ளைக்கும் நன்றாக இருந்திருந்தால், இந்த மூன்றாவது பிரிவாகிய, பாடசாலைக்குப் போகும் பிரிவும் நன்றாக இருக்கும். இம்மூன்று பிரிவும் நன்றாக இருந்தால் நான்காவது பிரிவான திருமணத்துடன் ஏற்படும் பிரிவும் எதிர்காலத்தில் நன்றாக அமையும். முதல் இரண்டு பிரிவும் நன்றாக அமையாத பிள்ளை பாலர் பாடசாலையில் படிக்கும்போது சில வேளைகளில் அவதானத்தைச் செலுத்தாது அழுதவண்ணமிருக்கக்கூடும். ஆகவே, இப்படிப்பட்ட வேறுபாட்டைப் புரிந்து கொண்டு பெற்றொரும், பிள்ளைகளும் செயற்பட வேண்டும்.. அதாவது தாய்ப்பாலை நிறுத்த முலையைச் சுற்றி வேப்பெண்ணெய் பூசுவர். பிள்ளைக்கு அடிப்பர். இது தவறு. படிப்படியாகத் தாய்ப்பாலைப் பிள்ளை நிறுத்தும். இதில் கலவரப்படத் தேவையில்லை. தனது திருப்தி, பாதுகாப்புணர்வை தாயிடமே பிள்ளை பெறுகின்றது.

(தொடரும்..)

- எஸ்.ஜே. யோகராஜா

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

பொறிஇன்மை யார்க்கும் பழியன்று
அறிவுஅறிந்து
ஆள்வினை இன்மை பழி

- *திருக்குறள்.*

# நமது நோக்கு

## போக்கும், தீர்வும் அரசிடமே!

இன்று ஜப்பான் ஹெக்கோன் நகரில் ஆரம்பமாக வுள்ள பேச்சுக்கள் - தொடரவுள்ள அமைதி முயற்சிகளைப் பொறுத்தமட்டிலும், அமைதி நீடித்து நிலைப்பதற்கான வாய்ப்புக்களின் அடிப்படையிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமையப் போகின்றன.

கடந்த சமாதான காலத்தில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்திய, மிகவும் தீவிரமாகக் கவனத்திற் கொள்ளப் பட்ட, போர் நிறுத்தத்தை அப்பட்டமாக மீறிய - சர்வதே சக் கடலில் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து - இனியும் அமைதி முயற்சிகள் தொடரப்படுமா என்ற அளவுக்கு விடுதலைப் புலிகளும், மக்களும் ஆத்திரமூட்டப்பட்ட தற்குப் பின்னர்,

சமாதானத்தின் மீதான புலிகளின் உறுதியின் வழியே, சர்வதேசத்தின் மீதான கௌரவத்தின் பேரில் - இந்த அமைதிப் பேச்சுக்கள் இன்று நடைபெறவிருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் மிகப்பெரும் விட்டுக்கொடுப்பி னால் - இந்தப் பேச்சுக்களுக்காக விடுதலைப் புலிக ளின் பிரதிநிதிகள் பங்கேற்கும் தீர்மானத்தைத் தலைவர் பிரபா மேற்கொண்டதன் பின்னர் - இன்று ஆரம்பமாகும் பேச்சுக்கள், இனியும் தொடரப்பட வேண்டுமா என்பது - அரசாங்கத் தரப்பின் முடிவுகளிலும், செயற்பாடுகளிலும், முழுப் பொறுப்பினையும் வைத்து நகர ஆரம்பிக்கின்றது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் - ஏற்க னவே அவர்கள் வலியுறுத்தியிருப்பதன்படி - இந்தப் பேச் சுக்கள் சிங்கள மக்களுக்கும், சிங்கள தேசத்திற்கு மான இறுதி வாய்ப்பு என்ற நிலையில் - மிகவும் உறு தியான, நடைமுறைச்சாத்தியமான தீர்மானங்களை அவர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

குறிப்பாக - பெரும் கொந்தளிப்பை உருவாக்கிக் கொண்டிருக்கும் கடற்பிராந்தியப் பிரச்சினைகள் தொடர் பாக - வலுவான முடிவொன்றினை அரசாங்கத் தரப்பி டமிருந்து பெற்றுக் கொள்வதிலேயே, இந்தப் பேச்சுக் களின் சுமுகநிலை தங்கியிருக்கின்றது என்றே சொல்லலாம்.

அதேவேளை - தொடரும் போர்நிறுத்தத்தை, உயி ரூட்டமுள்ளதாகச் செய்யவேண்டுமாயின் - புதிய நடை முறைகளை, அமைதியைப் பாதுகாப்பதற்கான உறுதிப் பாடுகளை அது கொண்டிருக்கவேண்டுமென்பதில் புலி கள் தீவிர கவனம் செலுத்துவர் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

இந்தவகையில் - 'இராணுவச் சமநிலை' என்ற விவ காரம் மிகப் பிரதானமாக முக்கியத்துவப்படுத்தப்படலாம் என்பதோடு - அதன் வழியேதான் - அரசாங்கத்துட னான சமாதான உறவும் நிலைபெறும் என்ற நிலைப்பாட் டிலும் புலிகள் மிக உறுதியாயிருப்பர் எனத் தெரியவரு கின்றது.

'இராணுவச்சமநிலை' என்பது இரு தரப்பினராலும் மதிக்கப்படுவதாக, பேணப்பட வேண்டியதாக -

பரஸ்பரம் இரண்டு தரப்புக்குமே தமது பலத்தைக் காத்துக்கொள்ளக் கூடிய வழிமுறைகளை அங்கீகரிக் கக் கூடியதாக -

இவற்றின் அடிப்படையில் இருதரப்பும் உண்மையி லேயே ஒருவரையொருவர் கௌரவிப்பதாக - போர்நிறுத்த வழிமுறைகள் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்பதற்கு அரசாங்கத்தரப்பு இணக்கம் தெரிவித்தாக வேண்டிய சூழலே ஜப்பானில் நிலவும் என அவதானிகளால் கரு தப்படுகின்றது.

அதேவேளை - மக்களது சுமுக வாழ்விற்குத் தடை யாக இருக்கும் உயர்பாதுகாப்புவலய விவகாரத்திற்கும் தெளிவான ஒரு தீர்வினைப் பெறுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகின்றது.

இந்தவகையில் - அமைதியை உறுதிப்படுத்துவதற் கான, மக்களுக்கு சுமுகவாழ்வை ஏற்படுத்துவதற்கான - காத்திரமான தீர்மானங்களை புலிகள் வேண்டி நிற்கும் போது -

அரசாங்கத்தரப்பின் பதில் அல்லது செயற்பாடுகள் எந்த வகையில் அமையப் போகின்றன என்பதிலேயே அனைவரது கவனமும் குவிந்துள்ளது.

வழக்கம்போல உறுதிமொழிகளையோ அல்லது அறி விப்புக்க்ளையோ அரசாங்கத் தரப்பிடமிருந்து, விடுத லைப் புலிகள் எதிர்பார்க்கவில்லை என்பது - இந்தமுறை பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகிவிடும் அளவுக்கு புலிகள் தமது நிலைப்பாட்டை அறிவித்ததிலிருந்து, அர சாங்கத் தரப்புக்குப் புரிந்திருக்கும் என்ற நிலையில் - அர சாங்கத் தரப்பின் எதிர்வினைகள் மிக முக்கியத்துவ மாகின்றன.

ஒட்டுமொத்தத்தில் - அமைதிச்சூழலை உறுதிப் படுத்துவதற்கான தெளிவான, உறுதியான, நீதியான முடிவுக்காக பேச்சுவார்த்தை மேசையில் எதிர்ப்புறத்தில் விடுதலைப் புலிகள் அமர்ந்திருக்க -

தமக்கு வழங்கப்பட்டுள்ள இறுதிச் சந்தர்ப்பம் என்ற வகையில் - அரசாங்கத் தரப்பு என்ன செய்யப் போகின் றது என்பதில்தான் பேச்சுக்களின் போக்கும் சரி, பேச் சுக்களுக்குப் பின்னாலான விளைவுகளும் சரி காத்திருக் கின்றன என்பதே யதார்த்தமாகிறது.

# தமிழ்க் கட்சியின் ஆதரவுடன் வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் அமைப்பதற்கு இந்திய அரசு நடவடிக்கை!

இலங்கையில் தொலைக்காட்சிச்சேவை ஒன்றையும், வானொலிச்சேவை ஒன்றையும் ஆரம்பிக்கும் முயற்சியில் இந்திய அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

தமிழ் வானொலி மற்றும் தொலைக்காட்சிச் சேவைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் கொழும்பிலுள்ள இந்தி யத் தூதரகம் ஈடுபட்டுள்ளது.

தமிழ்மக்கள் மத்தியில் இந்தியாவின் நிலைப்பாடுகளை எடுத்துச் சொல்வதற்காகவே இந்த ஊடகச்சேவைகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

தமிழ்க்கட்சி ஒன்றின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த ஊடகச்சேவைகளில் பணியாற்றுவதற்காகக் கொழும் பிலுள்ள ஊடகவியலாளர்களின் உதவி கோரப்பட்டிருப் பதாகவும் தெரியவருகின்றது.

(க)

# ஜப்பானிய பேச்சுக்களின் முடிவுகள் எதிர்க்கட்சிகளுக்கும் விளக்கப்படும்!

இன்று ஜப்பானில் நடைபெறும் சமாதானப் பேச்சு வார்த்தைகளின் பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உட்பட எதிர்க்கட்சித் தலைவர்களுடன் ஜப்பானில் நடத்தப்பட்ட பேச்சுக்கள் ஆராயப்பட இருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையில் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க, சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம் மற்றும் பேனாட் குணதிலக ஆகியோர் சமுக மளித்திருப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பான் பேச்சுவார்த்தையின் நிலைவரங்கள் தொடர்பாக எதிர்க்கட்சிகளின் சந்தேகங்களுக்கு இவர்கள் விளக்கம ளிக்கவுள்ளனர்.

அத்துடன், ஜப்பானில் நடக்கும் பேச்சுக்களில், அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் எட்டப்பட்ட முடிவுகள் எதிர்க்கட்சித் தரப்புக்கும் தெரிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட வில்லையாயினும், ரணில் விக்கிரமசிங்க - அண்மையில் ஜனாதிபதியை நேரடியாகச் சந்தித்தபோது, ஜனாதிபதிக்கு இது சம்பந்தமாகச் சூசகமாகத் தெரிவிக்கப்பட்டது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# பொலிஸ்காரரைத் தாக்கி காயப்படுத்திய வெளிவிவகார அமைச்சரின் செயலாளர்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ரிரோன பெர்னாண்டோவின் பிரத்தியேகச் செயலாளர், மொரட்டுவப் பொலிஸ்நிலையத் துக்குள் வைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

வெளிவிவகார அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளரா கத் தீபால் றொட்றிகோ கடமையாற்றி வருகின்றார். இவர் மொரட்டுவ நகரசபை உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

தீபால் றொட்றிகோவின் உறவினர் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்து, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்த னர். இதையடுத்து, அங்கு சென்ற தீபால் றொட்றிகோ தனது உறவினரைக் கைதுசெய்த பொலிஸ் உத்தியோகத் தரைப் பொலிஸ் நிலையத்துக்குள் வைத்தே கண்மூடித் தனமாகத் தாக்கியுள்ளார்.

இதனால், காயமுற்ற பொலிஸ் உத்தியோகத்தர் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இவரைத் தாக்கிய தீபால் றொட்றிகோவை பொலிஸார் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளனர்.

# நடைமுறையிலுள்ள கல்விமுறை மதிப்பீடு செய்ய ஏற்பாடு

தற்போது நடைமுறையிலுள்ள கல்விமுறை குறித்தும், அதன் தரம் குறித்தும் மதிப்பீடுகளைச் செய்வதற்குக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையின் அடிப்படையில் இந்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. நாட்டிலுள்ள 9876 பாடசாலைகளிலும் நடைமுறையிலுள்ள கல்விமுறையின் தரம் குறித்து மதிப்பிடப்படவுள்ள இந்த ஆய்வில், பாடசா லைகளுக்குத் தேவையான வளங்கள், உதவிகள் குறித்தும் கவனத்தில் எடுக்கப்படவுள்ளது.



'நிதர்சனம்' மகளிர் பிரிவினரால் உருவாக்கப்பட்ட 'உப்பில் உறைந்த உதிரங்கள்' முழுநீளத் திரைப்படத்தின் வெளியீட்டு விழா, மட்டக்களப்பில் நடைபெற்றபோது - மட்டு. அரசியற்துறை பொறுப்பாளர் கௌசல்யன் உரையாற்றுவதை முதற் படத்திலும், திரைப்படப் பிரதிகள் வழங்கப்படுவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

# வடமராட்சி கிழக்குக்கு மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கிலுள்ள மணற்காடு, குடத்தனை வடக்கு, குடத்தனை தெற்கு, பொற்பதி, அம்பன் ஆகிய பகுதிகளுக்கு மின்சாரவசதி ஏற்படுத்தித் தருமாறு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனை - வடமராட்சி சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கம், கிராம முன்னேற்றச் சங்கம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் ஆகியன கூட்டாக இணைந்து மகஜர் மூலம் கேட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் - தீவுப்பகுதிகள் உட்பட அனைத்துப் பிரதேசங்களுக்கும் மின்சாரவசதி கிடைக்கின்றபோதும், தமது பிரதேசம் மட்டும் காலம் காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வருவதாக அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அம்மகஜரில் - கடந்தவாரம் மின்சார எரிசக்தி அமைச்சர் 13 கிராமிய மின்சாரத் திட்டங்களை ஆரம்பித்த போதும், தமக்கு எவ்வித நன்மையும் கிடைக்கவில்லை. மின்சாரப் பயன்பாடின்மையால் நவீன வசதிகள் எவற்றையும் பயன்படுத்த முடியாதநிலையில் தாம் மிகவும் பின்தங்கியுள்ள தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறையினர், அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், மின்சார அத்தியட்சகர் ஆகியோருக் கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# பன்மைத்துவ கலாசாரத்தை ஏற்றுக்கொள்ளும் ஸ்பெயினின் ஒற்றையாட்சி அதிகாரப் பகிர்வு முறை!

**ஸ்பெயினின் அதிகாரப் பகிர்வுக்கு வழிகோலிய வரலாற்றுக் காரணிகள்**

ஸ்பெயினின் வரலாற்றினை நோக்கும்போது, அது அண்மைக் காலத்தில் இரண்டு முக்கிய கால கட்டங்களைத் தனக்கேயுரித்தான முறையில் கடந்திருக்கின்றது. அவற்றில் ஒன்று - காலனித்துவ காலத்தில் ஸ்பெயின் நாடானது, பிரான்ஸின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட நாடாக அமைந்திருந்தது. இதனால் பிரான்சிற்கேயுரிய ஒற்றையாட்சி முறைமையையும், காலனித்துவத்திற்குரிய "செலவுகளைச் சிக்கனப்படுத்தும்" தந்திரோபாயத்திற்கு ஏற்பவும் காலனித்துவத்திலிருந்து விடுதலை பெற்றதும் - அந்நாடும் ஒற்றையாட்சியைப் பேணிய ஒரு நாடாகக் காணப்பட்டது.

இதனால் புவியியல் ரீதியாக பிரிந்தும், மொழிரீதியான வேறுபாடுகளைக் கொண்டமைந்தும் பிராந்திய வேறுபாடுகள் (Regional Despanities) ஏற்றுக்கொள்ளப்படாத தன்மை அங்கு காணப்பட்டது. இதனால், 1998 ஆம் ஆண்டுவரை ஸ்பெயினில் இன முரண்பாடுகள் வலுத்துக் காணப்பட்டன.

ஸ்பெயின் நாட்டினது மற்றைய வரலாற்றுக் காரணி - இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள நாடுகளின் மீளுருவாக்கச் செயற்பாடுகளில், ஸ்பெயினும் பங்கு பற்றியமையாகும். அதாவது, உலக மகாயுத்தத்தின் அழிவுகளிலிருந்து மீண்டும் துரிதகதியில் தேச நிர்மாணத்தினையும், தேசிய பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் ஸ்பெயின் ஈடுபட்டதுடன், பொருளாதாரரீதியாகவும் தன்னை வலுப்படுத்திக் கொண்டது.

இந்த இரண்டு வரலாற்றுக் காரணிகளும் ஒன்றிலிருந்து மற்றது முரண்பட்ட தன்மையைக் கொண்டிருப்பதனை நாம் அவதானிக்கலாம்.

காலனித்துவ அனுபவத்தால் இனத்துவ முரண்பாடுகள் ஏற்பட, ஸ்பெயின் பொருளாதார ரீதியான அபிவிருத்தியை உலக மகா யுத்தத்தின் பின்னரான துரித நடவடிக்கையின் மூலம் பெற்றுக் கொண்டது.

**மொழி அடிப்படையிலான பிராந்திய அரசுகள்**

ஸ்பெயின் நாட்டில் கலாசாரம், மொழி, இனத்துவம் என்ற மூன்று விடயங்களும் குழப்பகரமான முறையில் இருந்தமையால் - இலகுவான முறையில் வேறுபாடுகளைச் செய்து,



ரோம் தியேட்டர் - ஒரு வரலாற்றுச் சின்னம்

பிராந்திய அரசுகளை உருவாக்குவது சுலபமான காரியமாக அமையவில்லை.

பொதுவாக, ஒரு கலாசாரத்தின் விழுமியங்களைப் பின்பற்றும் மக்கள் கூட்டம், ஒரேமொழியைப் பின்பற்றினால் சுலபமாக அவர்களை இனத்துவ அடையாளத்திற்குள் கொண்டுவந்துவிடலாம்.

## சுயநிர்ணயம் ஒரு பார்வை

## பகுதி - 25

ஆனால், ஸ்பெயினில் ஒரே கலாசாரத்தினைப் பின்பற்றும் வெவ்வேறு மொழிக்குழுமங்கள் காணப்படுகின்றன. இதனால், இனத்துவ அடையாளம் என்னும்போது அல்லது தேசிய அடையாளம் என்னும்போது - கலாசாரத்தைக் கருத்தில் எடுப்பதா அல்லது மொழியினைக் கருத்தில் எடுப்பதா? என்ற தேர்வு ஸ்பெயினின் அரசறிவியலாளர்களுக்கு ஏற்பட்டது.

இதனைவிட, வரலாற்று ரீதியாக, அதாவது பிரான்சின் காலனித்துவத்திற்கு முற்பட்ட காலத்தில் தனியரசுகளாகச் செயற்பட்ட அரசுகள் - காலனித்துவ காலத்தில் ஸ்பெயினோடு ஒன்றிணைக்கப்பட்டதனால் அவை ஒற்றையாட்சி முறைமைக்குள் கொண்டு வரப்பட்டிருந்தன.

இவ்வாறான - குழப்பகரமான சூழலில்தான் ஸ்பெயினில் சமஷ்டி முறைமை தெளிவானவகையில், அதன் தத்துவார்த்தப் பின்னணியின் அடிப்படையில் பின்பற்றப்பட முடியாமல் இருப்பதாக அரசறிவியலாளர்கள் கருதுகின்றனர்.

இந்தப் பின்புலத்தில் - ஸ்பெயினில் பிரிவினைவாதம் கோரிய யுத்தங்களும் நடைபெறத் தொடங்கின. இப்பிரிவினைவாதத்தினைத் தவிர்ப்பதற்கே ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப்பகிர்வு முறைமை ஸ்பெயினில் கொண்டு வரப்பட்டது.

ஸ்பெயினில் பிராந்திய அரசுகளை, அவற்றின் எல்லைகளை வரையறுப்பதில் இவ்வாறான குழப்பகரமான, தெளிவில்லாத தன்மை காணப்பட்டதால் - பிராந்திய அரசுகள் மொழிரீதியான அடிப்படையில் பிரிக்கப்பட்டன. அவ்வாறு மொழிரீதியான அடிப்படையில் பிரிக்கப்பட்டபோதும், வரலாற்று ரீதியாகத் தனியரசுகளை வைத்திருந்த பிராந்தியங்களும் கருத்தில் எடுக்கப்பட்டு, அவை பிராந்திய அரசுகளாக உருவாக்கப்பட்டன. இந்த இரண்டு அடிப்படையிலுமே ஸ்பெயினில் பிராந்தியங்களதும், அவற்றின் எல்லைகளும் 1978 ஆம் ஆண்டு அரசியற்திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பிராந்தியங்கள் உருவாக்கப்பட்டபோதும், வரலாற்றுரீதியாகத் தனியரசுகளைக் கொண்டமைந்த பிராந்தியங்களுக்குச் சமச்சீரற்றமுறையில், ஏனைய பிராந்தியங்களோடு ஒப்பிடும்போது, அதிகாரங்கள் கூடுதலாக அளிக்கப்பட்டுள்ளன.

மேலும், பிராந்திய அரசுகள் உருவாக்கப்பட்டு, உரியமுறையில் அவ்வரசுகளது சுயாட்சியினை உறுதிப்படுத்தும் வகையில், அதிகாரங்கள் கையளிக்கப்பட்டபோதும், அப்பிராந்தியங்களிற்குள் தனித்துவமான மக்கள்குழுமம் எனக்கோரும் மக்களும் காணப்பட்டனர். அவர்களுக்குரிய நல்லாட்சியினை உறுதிசெய்யும் வகையில் "தன்னாட்சிக் குழுக்கள்" என்ற வரையறைக்குள் அவர்களுக்குரிய அதிகாரசபைகளை உருவாக்கி, அவற்றின் மூலம் தன்னாட்சிக் குழுக்களின் நல்லாட்சியும் நடைபெற்று வருகின்றது.

**சர்வதேச ரீதியில் முரண்பாடுகளைத் தீர்க்கும் அதிகாரப்பகிர்வு மாதிரியா?**

ஸ்பெயினில் 1978 ஆம் ஆண்டு அரசியற்திட்டத்தினை உருவாக்குவதில் அந்நாட்டு மன்னர் பரம்பரைக்குக் கூடுதலான செல்வாக்கு இருந்ததாகக் கூறப்படுகிறது. ஸ்பெயினில் வாழும் ஒவ்வொரு குழுமங்களதும் இனத்துவத்தை, கலாசாரத்தை, மொழியை ஏற்றுக்கொண்டு - அவரவர்களுக்குரிய சுய அந்தஸ்து, சுயாட்சியினை உறுதிசெய்யும் அரசியற் திட்டத்தினை அந்நாட்டு மன்னரே உருவாக்க முன்நின்றுள்ளார்.

ஸ்பெயின் அரச பரம்பரை அவ்வாறு செய்ததும் - பிராந்தியரீதியாகவும், தேசியரீதியாகவும் இருந்த "அரசியல் உயர்குழாத்தினர்", ஸ்பெயின் பன்மைத்துவத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்குள் தள்ளப்பட்டனர் எனலாம்.

இவ்வரசியல் உயர்குழாத்தினர் - மக்களை பன்மைத்துவக் கலாசாரத்தினையும், மீள் இணக்கப்பாட்டினையும் ஏற்படுத்திக் கொள்வதற்கும் தம்மை வழக்கப்படுத்திக்கொண்டனர்.

இவ்வாறு உருவான ஸ்பெயின் அரசியற்திட்டமும், அதன் அதிகாரப்பகிர்வும் இன்று சோவியத் கட்டமைப்பிலிருந்து உடைந்துள்ள, கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு "ஸ்பெயின் மாதிரி" உதவியாக அமையுமாவென ஆராயத் துணையாகி வருகின்றன. அதேவேளை, தற்பொழுது ஸ்பெயின் மாதிரியை வைத்துக்கொண்டே, பிரித்தானியா - வேல்ஸிற்கும், ஸ்கொட்லாந்திற்கும் அதிகாரங்களை வழங்கியுள்ளது.

இதனடிப்படையில், தற்பொழுது ஸ்பெயினின் மாதிரியும், சர்வதேச ரீதியில் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அரசியற்திட்டமாக உள்ளது. ஆனால், இதன் சாதக, பாதக விடயங்கள் குறித்து நன்கு ஆராயப்படவேண்டும்.

*(பிரதி செவ்வாய் தொடரும்)*

**வேலும்மயிலும் சேந்தன்**

---

# ஆயுதப் போராட்டத் தோல்வியால் அரசியற்களம் வந்துள்ள ஜே.வி.பி.

2002 ஆம் ஆண்டு இலங்கை அரசியலில் நல்லதொரு சகுனத்தை ஏற்படுத்தியது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. சந்திரிகாவின் "சமாதானத்துக்கான யுத்தம்" என்ற கனவு கலைந்து, ஒரு யதார்த்தமான அணுகுமுறையை ரணில் விக்கிரசிங்க கொண்டுவருவதற்குச் சிங்கள



ரோஹண விஜேவீர

மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கியிருந்தார்கள்.

யாருமே எதிர்பாராதவாறு விடுதலைப்புலிகளின் தலைவர் - மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டமை, அரச - புலிகளின் இராஜதந்திரிகளும், இராணுவத்தளபதிகளும் கைகுலுக்கியமை, ஏ-9 என்ற யாழ் - கண்டி பிரதானசாலை திறக்கப்பட்டமை-

இலங்கை விமானப்படை உலங்குவானூர்திகள் சமாதானத் தூதுவர்களை சுமந்தவாறு கிளிநொச்சி மணணைப் பலதடவை தொட்டமை, உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றனவும், இராஜதந்திரிகளும் - விடுதலைப்புலிகளை அடிக்கடி சந்தித்தமை, விடுதலைப்புலிகளுக்கு எதிராக அரசியலில் ஈடுபட்ட பலர் - புலிகளை நேரடியாகச் சந்தித்துக் கொண்டமை போன்ற எல்லாமே 2002 ஆம் ஆண்டு மாசி மாத நடுப்பகுதிவரை கற்பனையில் கூட நினைத்துப் பார்த்திருக்க முடியாது.

இந்தச் சமாதானச் சூழலில் இலங்கையின் எல்லா இனமக்களும் சுதந்திரமாக, இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியநிலையில் - முதலீடுகள், தமது எதிர்காலம் பற்றியெல்லாம் சிந்தித்து செயற்படத் தொடங்கியநிலையில் மீண்டும் ஒரு நெருக்கடியை இலங்கை மக்கள சந்திக்க வேண்டியதாயிற்று.

இதில் பிரதான பாத்திரமேற்பது "ஜனதா விமுக்தி பெரமுன" என்று சிங்களத்தில் அழைக்கப்படுகின்ற ஜே.வி.பி அமைப்பாகும். மக்கள் விடுதலை முன்னணி எனத் தமிழில அழைக்கப்படுகின்ற இக்கட்சி - தற்போது எந்த மக்களை விடுதலை செய்யப் பாடுபடுகின்றது என்பது பிரதான கேள்வியாகும்.

ஐக்கிய தேசியக்கட்சி விடுதலைப்புலிகள் கூட்டு என்பது, ஜே.வி.பியினரை அரசியலில் ஓரம் கட்டிவிடும் வல்லமையைப் பெற்றுவிட்டதால, அதை உடைக்க வேண்டும் என்பதில ஜே.வி.பி. குறியாக இருக்கிறது.

அதேவேளை, அரசியலில் தான ஒரு பொம்மையாக்கபட்டு விட்டதாக உணரும் ஜனாதிபதி சந்திகாவின் சீற்றம் கடந்த ஒரு வருடமாக யுத்தமின்மை காரணமாகப் பல லட்சரூபாய்களைக் கறுப்புப் பணமாக உழைக்க முடியாது - சாய்ந்துபோன பல்பக்க பொருளாதார நெருக்கடியினைச் சந்தித்துக் கொண்டிருக்கும் (கட்டிய ஹோட்டேல்கள், வீடுகள், பாரிய முதலீடுகள், மேலதிகசலுகை, விசேட பணமின்மை) இராணுவத் தலைமைகள் என்ற முத்தரப்பினர் ஒருவருடச் சமாதானச்சூழலிலே தாக்குப்பிடிக்க முடியாது திண்டாடுகின்றனர்.

இவ்வாறு, ஒரு சிறு தொகையினரின் எதிர்பார்ப்பும், அபிலாசைகளும் முழுநாட்டையுமே பாதிக்கும் நிலைதோன்றியுள்ளது. பொறுப்பின்மை, நாட்டுப்பற்றின்மை, தூரநோக்கின்மை போன்ற எல்லாமே இதற்கான அடிப்படைக் காரணிகள் எனலாம்.

ஜே.வி.பி. அமைப்பு, ரோஹண விஜேவீர என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட சீனச்சார்பு கம்யூனிச சிந்தனையைத் தழுவிய அமைப்பாகும். இலங்கையிலுள்ள குட்டி முதலாளித்துவப் பொருளாதார அமைப்பினை உடைத்து, சகல மக்களும் சமமான பயனைப் பெறவேண்டும். (தமிழர்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை, தமிழரை ஒரு தனியான தேசிய இனமாக அவர்கள் அங்கீகரிக்கவும் இல்லை.) என்ற சிந்தனையை முன்னெடுத்தவர்கள். இதனால் கிராமியப் பொருளாதாரத் திட்டமிடல்களை மேற்கொண்டு - அதனூடாக மக்களை அணிதிரட்டி, நகரங்களைக் கைப்பற்றுவதே அவர்களின் இறுதி இலக்காகவும் இருந்தது.

எங்கே செல்லும் இந்தப் பாதை...?



1971 ஆம் ஆண்டு பெரும் கிளர்ச்சி ஒன்றினை ஏற்படுத்துவதற்கு முன்னதாக, கியூபப் புரட்சியின் வெற்றிக்காக உழைத்த டாக்டர் ஏனஸ்ரோ - சேகுவராவின் வாழ்க்கைவரலாற்று நூலினை சிங்களமொழியில் பதிப்பித்து சிங்கள இளைஞர், யுவதிகள் மத்தியில அவற்றைப் பிரபல்யப்படுத்தி (பல்கலைக்கழக மாணவர்கள் கூடிய பங்கு வகித்தனர்) போராட்டத்தில் குதித்தமையால், ஜே.வி.பியினரை சேகுவேராக்காரர் என்ற ஒரு புதிய இனமாகவே சிங்களமக்கள் பார்க்கத் தொடங்கினர்.

இப்போராட்டத்தில் தென்பகுதியின் வரண்ட பிரதேச இளைஞர், யுவதிகள் அதிக பங்களிப்புச் செய்தனர்.

**விஜயன்**

அதற்கான இன்னோர் காரணம் கொழும்பை மையமாகக்கொண்ட ஆட்சியாளர்கள் தம்மைக் கவனிப்பதில்லை என்ற கருத்தாகும்.

*(நாளை தொடரும்)*

ICC Cricket World Cup
SOUTH AFRICA 2003

# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




# ஆஹா என்பார்கள்

இலங்கை அணிப் பயிற்றுநர் வட்மோர், போர்ட் எலிசபெத் தடம் இலங்கையணிக்குச் சாதகமாக இருக்கும் என்று நம்பிக்கை கொள்ள, மறுபுறம் கென்ய அணிப் பயிற்றுநர்

250 ஓட்டங்கள் எடுத்தால், ஆட்டம் ஒரு சுவாரசியமான கட்டத்தை அடையும் என்கிறார் அடக்கமாக. (வெற்றி வாய்ப்பு அதிகம் என்பதை அடக்கி வாசிக்கிறார் வட்மோர்)

புதிய வேகத்தோடு அரை இறுதிப் போட்டியில் விளையாடும் என்ற நம்பிக்கை, இலங்கை அணிக்கு நிச்சயம் உண்டு. ஏனெனில்,படிப்படியாக முன்னேற்றத்தைக் காட்டிவரும் அணி இலங்கை. உண்மையைக் கூற வேண்டுமாயின், இலங்கை அணி அவுஸ்திரேலியாவுடன் சமதையாகப் போராடத் தகுதியற்ற அணி என்று யாரும் எதிர்வு கூறினால், அவர்கள் கிரிக்கெட் வரலாறு அறி


பின்னால பாருங்கோ - அது எங்களுக்குத்தான் பாருங்கோ.


நாங்கள் முந்தியும் இவங்கள சரிச்சிருக்கிறம்.

சந்தீப் பட்டீல், கென்ய அணி வீரர்களின் காயங்கள்,உபாதைகள் பற்றி மிகவும் கவலைப்படுகின்றார்.

இலங்கை சந்திக்கப் போவது அவுஸ்திரேலியாவை. ஒரு ஆட்டத்தில்கூட அவுஸ்திரேலியா இதுவரை தோல்வியடையவில்லை. இலங்கை அணி அவுஸ்திரேலிய அணியுடன் தோல்வியுற்றது, அவ்வளவு கௌரவமாகவும் அல்ல. இதேவேளை, ST .GEORGE'S PARK சுழற்பந்து வீச்சாளருக்குச் சாதகமாக அமையும் தன்மை கொண்டது என்பதை மறக்கவும்கூடாது. முரளி உலகின் நம்பர் வன் சுழற்பந்து வீச்சாளர் என்பதை மறுக்கவும் கூடாது. இதேவேளை, இதற்கு முன் அவுஸ்திரேலியா இதே மைதானத்தில் விளையாடிய இரண்டு ஆட்டங்களிலும் சிறிது தளம்பியதும் உண்மை.

ஆனால், அரை இறுதி ஆட்டத்தில் இதையெல்லாம் அவுஸ்திரேலியா யோசிக்காமல் விடாது. அதே வேளை, இவர்களை அதிகம் துள்ள விடாமல் செய்யும் CAPACITY இலங்கை அணிக்கு உண்டு. வட்மோர் கருத்துக்கூறுகையில், இந்த மைதானத்தில் 210 ஓட்டங்கள் எடுப்பதே கஷ்ரம். இலங்கை TOSS வென்று

பிரெட் லீயைப் பற்றி விஷேட கவனம் செலுத்த வேண்டும் என்றும், இலங்கை அணி தங்கள் பிழைகளிலிருந்து நிறையக் கற்றுக்கொண்டிருக்கிறது என்றும், இலங்கை அணியை உளவியல்ரீதியில் பலப்படுத்துவதே தனது கூடிய ஆர்வம் என்றும் கூறும் வட்மோர், இலங்கை அணி வீரர்களை FINE TUNING செய்ய வேண்டிய தேவையொன்றே பாக்கி என்கிறார். நன்கு கிரிக்கெட் அனுபவம் வாய்ந்த ஒருவர் கருத்துக் கூறுகையில் - விவியன் றிச்சட்ஸ், கோர்டன் கிரீனிட்ஜ், டெஸ்மன்ட் ஹெயின்ஸ், சுனில் கவாஸ்கர் போன்ற துடுப்பாட்ட வீரர்களுக்குப் பிரெட் லீ பந்து வீசி இருந்தால், முதல் ஓவரிலேயே பொன்டிங் 'போது மடா சாமி' என்று எல்லைக்கோட்டில் புல்லுப் புடுங்க லீயை விட்டிருப்பார் என்கிறார். உண்மையும் அதுதான். பழசுகள் இதனை ஏற்றுக் கொள்ளும்.

இலங்கை அணியின் தரத்துக்கு, SUPER SIX இற்கு இப்படி ஒழுங்கைகளால் வந்திருக்க வேண்டியதில்லை. HIGH WAY யில் அட்டகாசமாக வந்திருக்கலாம். ஆனால், மத்திய வரிசை ஏனோ தொய்ந்துவிட்டது. இருந்தும்

னும் தோற்றது. ஒடும்பே, ஓடயோ, ஒட்டினோ போன்றோரின் காயங்கள், சந்தீப் பட்டீலைக் கவலையடையச் செய்கின்றன. கென்யா, இந்தியாவை

கள் கலந்த திகில் தொடர்.

இந்தத் திகில் கென்யர்களையே, இந்திய வீரர்கள் சந்திக்கப் போகிறார்கள். இந்தியாவின் 2003

# அடடா என்பார்கள்

யாதவர்களாகவே இருப்பார்கள்.

இது ஒரு புறம் இருக்க, இந்திய


கொடியுடன் கிண்ணம் கிடைக்குமா?

டெஸ்ட் வீரர் சந்தீப் பட்டீல், கென்யப் பயிற்றுநராகப் பாத்திரம் ஏற்று, 'கறுப்புதான் எனக்குப் புடிச்ச கலரு' என்று புதிய கிரிக்கெட் வரலாறு எழுத மார்தட்டுகிறார். உலகக் கிண்ணத்தில், கென்யா இம்முறை பின்னடைவுகளைச் சந்தித்தது உண்மை. ஆனால், புறமுதுகிட்டு ஓடவில்லை. எதிரியைத் தொலைத்து விட்டேதா

98 இல் குவாலியரிலும், 2001 இல் தென்னாபிரிக்காவிலும் மண் கவ்வ வைத்திருக்கிறது என்பது மனம் கொள்ளத்தக்கது. இப்பொழுது கென்யர்கள், பழைய, 'நீண்ட இடைவெளி ஆச்சரியங்கள்' தந்த முறையை மாற்றி, தொடர்கதையொன்றை எழுதத் துணிந்துவிட்டார்கள். 2003 உலகக் கிண்ணப் போட்டிகள், கென்யாவைப் பொறுத்தவரை, எழுத்தாளர் சுஜாதாவின் விஞ்ஞான உண்மை

எழுச்சி, தனிமைப்படுத்தப்பட்ட அணி வீரர்கள் கொண்ட மனத்துயரத்தின் வெளிப்பாடான விஸ்வரூபம். இது தென்னாபிரிக்கா முழுவதும் வியாபித்து நிற்கின்றது. சச்சின் FORM காணத் தேவையில்லை. அவர் நினைத்தால், அடுத்த நிமிடம் சோவென நீரைக் கொட்டும் விக்ரோறியா நீர்வீழ்ச்சி ஆவார். யாரும் அணை கட்டமுடியாது. அப்பால் மத்திய வரிசையில் ஒரு 'காளைக் கூட்டம்', கென்யாவின் வளம் நிறைந்த நம்பிக்கைப் பெருந்தோட்டங்களைச் சூறையாடிவிடும். பின்னால் இளமை, புதுமை, அனுபவம் கலந்த ஒரு புயல் மையம். எந்த வீரனின் இருப்பையும் கேள்விக் குறியாக்கும், DECENT KILLERS.

ஆகவே, இறுதிப் போட்டிக்கு வண்டரர்ஸ் மைதானத்தை நோக்கிச் செல்லப் போகிறவர்கள் யாராயிருந்தாலும், அது வேறு விடயம். KINGS MEAD இல் இரு அணியினருமே போட்டி போட்டுக் கொண்டு மன்னர்களாகவே முடி சூடப் போகிறார்கள் ✷

-ஜோசப் கிருஷ்ணா

# வெள்ளைப் புறா பறக்குது


கப்டனாக மேற்கிந்தியா போறன் - வரட்டுமா?

இவர் விட்டுக்கொடுக்கவும் மாட்டார். இவரை விட்டுவிடவும் முடியாது. உலகக் கிண்ண அணியில் இவர் இல்லை. அது அவுஸ்திரேலியாவைப் பாதிக்கவும் இல்லை.

இதேவேளை, உள்ளூரில் நடைபெற்ற பிராந்தியப் போட்டிகளில், தனது நியூசவுத்வேல்ஸ் அணிக்காக மூன்று செஞ்சரிகளும் குவிதது, பின்னதாக, PURA CUP இறுதிப்போட்டியில், 246 ஓட்டங்களில் குயீன்ஸ்லாந்தை மண்கவ்வச்செய்து சாம்பியன் பட்டமும் பெறவைத்தார். இறுதியாக நடைபெற்று முடிந்த 10 டெஸ்ட் ஆட்டங்களில், எட்டில் வெற்றி பெற்றவர். இப்போது 4 டெஸ்ட் போட்டித் தொடர் ஒன்றுக்காக, மேற்கிந்தியாவுக்குச் செல்லும் அணிக்கு இவரே தொடர்ச்சியான தலைவர். ஆஷசின் பின் டெஸ்ட் அணித்தலைமையில் இருந்து இவர் நீக்கப்படவில்லை. ஒருநாள் அணியிலிருந்து மட்டுமே நீக்கப்பட்டார்.

ஸ்ரீவ் வோவுக்கு தற்போது வயது 37. மீண்டும் அணித்தலைவர் பதவி இவரைத்தேடி வந்திருக்கிறதென்றால், ஸ்ரீவ் வோவின் திறமை எந்தளவு என்று பார்த்துக்கொள்ளலாம். இவரிடமிருந்து உறுதியான பதிலை நீண்ட நாட்களாக எல்லோரும் எதிர்பார்த்தார்கள். அவர் நிச்சயமாக ஒரு முடிவு கூறவில்லை.

ஏனெனில், இன்று பெற்றிருக்கும் தலைமைப் பதவி தன்னைத்தேடி வரும் என்று நிச்சயமாக அவர் நம்பிக்கொண்டிருந்ததே காரணம். மறுவளமாக, அவுஸ்திரேலியத் தெரிவாளர்கள் எவ்வளவு நிச்சயமாக, துல்லியமாக அணித்தெரிவில் காரியமாற்றுகிறார்கள் என்பதையும் நோக்கலாம்.

அடுத்து, கில்கிறிஸ்ட் வகித்த உபதலைவர் பதவி, ரிக்கி பொன்டிங்கின் கைக்குப் போயிருக்கிறது. இங்குகூட கில்கிறிஸ்ட்டின் முக்கியத்துவத்தில் ஏதும் குறைவில்லை என்று அறிவித்து, 2003 ODI களின் பின், பொன்டிங் உபதலைவராக இருப்பதே பொருத்தம் என்றும் கூறியிருக்கிறார்கள்.

ஸ்ாவ் வோ, இதுவரையில் அலன் போடருக்குச் சமமாக 156 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியவர். இவ்வருட முதல்தர ஆட்டங்களில், 899 ஓட்டங்கள் பெற்றவர். (2 ஆம் இடம்). ஆஷஸ் டெஸ்ட்டில் அவர் அடித்த சதம் (102), டொன் பிரட்மனின் 29 சதங்களைச் சமப்படுத்தியது. அற்புதமான வீரர். அவரைக் கிரிக்கெட் ரசிகர்கள் வாழத்துகின்றோம்.

மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெறவிருக்கும் டெஸ்ட் தொடரில் பங்குபற்றவிருக்கும் அவுஸ்திரேலிய அணியில் இடம்பெறுவோர் - ஸ்ரீவ் வோ (அணித்தலைவர்), ரிக்கி பொன்டிங் (உபதலைவர்), அன்ட்ரூ பிக்கல், அடம் கில்கிறிஸ்ட், ஜேசன் ஜிலெஸ்பி, மத்தியூ ஹேடன், பிரெட் ஹொக், ஜஸ்ரின் லேங்கர், பிரெட் லீ, டரன் லீமன், மாட்டின் லவ், ஸ்ருவட் மக்கில், கிளென் மக்ரா, டேமியன் மாட்டின், ஆஷ்லி நொப்க். ★

- B.H.ரூபன்.

# ஷெப்பர்ட் முதலாம் பிள்ளை!


பக்னர் ஐயா - நீங்க பாஸாமே!

அணியில் வீரர்கள் மாற்றம், புதிய தெரிவு. அணியின் பயிற்றுநர் மாற்றம், புதிய தெரிவு. அணி விளையாட்டு வரிசைகள் மாற்றம், புதிய தெரிவு. இப்படியான மாற்றங்கள், தெரிவுகள் உலகக் கிண்ணப் போட்டிகளை அண்டி நிறையவே கதைக்கப்படுகின்றன. இந்த மட்டில் இந்த மாற்றங்கள், தெரிவுகள் முடிவடைந்துவிடவில்லை. உலகக் கிண்ணப் போட்டிகளின் நடுவர்கள் தொடர்பிலும் இவை நடைபெற்றன, நடைபெறுகின்றன. தற்போது அரையிறுதி ஆட்டத்திற்கான நடுவர்கள் வடித்து எடுக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த வகையில், முதலாவது அரை இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள நடுவர்கள், இங்கிலாந்தின் டேவிட் ஷெப்பர்ட் மற்றும் தென்னாபிரிக்காவின் ரூடி கோட்சன். 62 வயதாகும் ஷெப்பர்ட் 96, 99 உலகக்கிண்ண இறுதிப் போட்டிகள் உட்பட, 125 ODI கள், 69 டெஸ்ட் போட்டிகளில் நடுவராகி நின்றவர். கோட்சன் ICC யின் தெரிந்தெடுக்கப்பட்ட எட்டு நடுவர்களில் ஒருவர் அல்ல. இருந்தும் திறமை பரிசளித்துள்ளது. மூன்றாவது மத்தியஸ்தர் நியூசிலாந்தின் பில்லி போவ்டன். இவரது பரதக்கலை முத்திரை கவர்ந்திழுக்காத ரசிகர்களே இல்லை.

இரண்டாவது அரை இறுதிப் போட்டியின் மத்தியஸ்தர்கள், மேற்கிந்தியத் தீவுகளின் ஸ்ரீவ் பக்னர் (புன்னகை மன்னன்), மற்றும் அவுஸ்திரேலிய டரல் ஹாப்பர். இந்த ஆட்டத்தின் மூன்றாவது நடுவர் அவுஸ்திரேலிய சீமொன் டோ.ᐟ.பல்.

ஒவ்வொரு நடுவரும் ஒவ்வொரு ஆட்டத்தின்போதும் கணிப்பீடு செய்யப்பட்டார்கள். இறுதியாகத் தெரிவுகள் அத்தனையும் அணித் தலைவர், ஆட்ட நடுவர் மற்றும் ICCயின் கருத்துக்களின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிரிக்கெட் விளையாடுவது மட்டும் சோதனையல்ல. அணித்தலைவருக்கு மட்டும் சோதனையல்ல. பயிற்றுநர்கள் சந்திப்பது மட்டும் சங்கடங்களும் சோதனைகளும் அல்ல. நடுவர்கள் எதிர்கொள்வதும் சோதனைதான். அப்பாடா இவர்கள் PASS. CLEVER BOYS.

- *சித்திரா.*

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் அனுசரணை

உங்கள் வயது 10ற்கும் 15ற்கும் இடைப்பட்டதா? அப்படியென்றால் இதோ அற்புதமான செய்தி!

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

டொட் கொம் ஸ்பின்

A.T.M. அட்டையுடனான கணக்கு.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஈராக் மீதான தாக்குதல் எந்நேரமும் வெடிக்கலாம்!

(அமெரிக்கா)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில், நேற்று ஈராக்கிற்கு எதிராக இரண்டாவது தடவையாகக் கொண்டுவரப்பட்ட பிரேரணைகள் வாக்கெடுப்பிற்கு விடப்படாமலேயே கைவிடப்பட்டன.

ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ஸ்பெயின் ஆகிய நாடுகள், ஈராக்கிற்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கொண்டு வந்த பிரேரணைகளை, பிரான்ஸ், வீட்டோ அதிகாரம் மூலம் இரத்துச் செய்யப்போவதாக எச்சரிக்கை விடுத்ததனைத் தொடர்ந்து, பாதுகாப்புச் சபையில், ஈராக்கிற்கு எதிராக நடத்தத் திட்டமிட்டிருந்த இராணுவ நடவடிக்கைக்கு ஆதரவு கிடைக்கவில்லை.

பாதுகாப்புச்சபையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளில பெரும்பான்மை நாடுகள், ஈராக் மீதான இராணுவ நடவடிக்கைக்கு ஆதரவளிக்கவில்லை என பிரான்ஸ் அறிவித்துள்ளது.

இதேவேளை, ஐக்கியநாடுகள் சபையின் ஆயுதக் கண்காணிப்பாளர்கள் அனைவரையும், உடனடியாக ஈராக்கை விட்டு வெளியேறுமாறு, அமெரிக்க அரசாங்கம் கோரியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், நேற்று மாலை அமெரிக்க நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் உரையாற்றினார்.

ஒன்றில் ஈராக்கை விட்டு சதாம் வெளியேற வேண்டும் அல்லது யுத்தத்தைச் சந்திக்கத் தயாராக வேண்டும் என புஷ் அப்போது கூறினார்.

நேற்று பக்தாத்திலுள்ள தங்களது தூதுவராலயங்களிலுள்ள, அவசியப்



பக்தாத்திலிருந்து அச்சமுடன் வெளியேறும் ஈராக்கியர்கள்

பணியில் ஈடுபடாத அனைத்து ராஜதந்திரிகளையும் உடனடியாக வெளியேறுமாறு, பல நாடுகள் தங்களது தூதுவராலயங்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

## புலிகளின் சமாதான செயலகத்திற்கு இணையத்தளம்

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலணியினால் புதிய வெப்தளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சமாதானப் பேச்சுக்கள் குறித்த விபரங்கள், தகவல்களை இந்த வெப்தளம் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### திருமலைக்...

ரோந்துப்படகில் இருந்த ஒரு கடற்படைச் சிப்பாய், மற்றைய படகில் இருந்து ஒருவர் கடலுக்குள் ஒரு பொருளை வீசியதாகத் தெரிவித்திருக்கிறார்.

தமது போராளிகள் மூவர் திருகோணமலையில் கைதான சம்பவத்தை விடுதலைப் புலிகள் தரப்பும் உறுதி செய்துள்ளது.

எனினும், இவர்கள் நேற்றே பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

### போர்நிறுத்த...

தயாரிக்க வேண்டியிருப்பதால், அது பற்றியும் விரிவாக ஆராயப்படும். நெருக்கடிநிலை, அவசரநிலை ஏற்படுமாயின், இது முக்கிய அரசியல் பேச்சுவார்த்தைகளுக்குப் பாரிய இடையூறாக அமையலாம். போர் நிறுத்த உடன்படிக்கை மீறப்படும் போது, அந்தக் குறைபாடுகளை நீக்கும் பொருட்டு அடித்தளங்கள் இடப்பட வேண்டும். இதன்மூலமே, உதவி வழங்கும் நாடுகள் உட்பட சர்வதேச சமூகத்திடம் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

### ஒரு அமர்வு...

அவசியமோ இருக்காது. ஆனால், போர் நிறுத்த மீறல்களால் ஏற்படும் சிக்கல்களுக்கு முடிவு எடுக்கப்படலாம் என்றார்.

### ஜப்பானின்...

வழங்கவுள்ளதாகவும், இதனையடுத்து பிற்பகல் 3 மணிக்கு ஜப்பானில் உள்ள பிரின்ஸ் ஹோட்டேலில் பேச்சுக்கள் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் ஜப்பானுக்குச் சென்றடைந்த அரச மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், நேற்று உத்தியோகப்பற்றற்ற பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

இரு தரப்பும் மிகவும் சிநேகபூர்வமாக உரையாடல்களில் ஈடுபட்டனர். இவ்வுரையாடல்களின்போது, இன்று ஆரம்பமாகவிருக்கும் ஆறாம் சுற்றுப் பேச்சுக்களில் விவாதிக்கப்பட இருக்கும் விடயங்கள் குறித்த நிகழ்ச்சி நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ஆறாம் சுற்றுப் பேச்சுக்கள் இன்று ஆரம்பமாகின்றன.

(200)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003
அரை இறுதி ஆட்டம்
அவுஸ்திரேலியா Vs இலங்கை - ST.GEORGE'S PARK, PORT ELIZABETH - 2 pm.





மிற்சுயி ஸ்தாபனத்தின் புதிய படைப்பு
ஹினோடே சிமெந்து
வேலைக்கு முந்தும் - ஜப்பானிய பெயர் !
(சி-684)

# அரசும்-விடுதலைப் புலிகளும்...

புக்குழுவின் தலைமைக்கு அதிகாரம் உள்ளது. ஆனால், கடல் சட்டம் தொடர்பான ஐ.நா. சாசனம் குறித்து விமர்சிப்பதற்கு அதற்கு அதிகாரமில்லை. திருமலை சம்பவத்தில் நிலைமை மோசமடைந்து, தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்பாக, அரச தரப்புக்கும்- விடுதலைப் புலிகள் தரப்புக்கும் கண்காணிப்புக் குழுவை இவ்விடயத்தில் தலையிடுமாறு கோருவதற்குப் போதிய அவகாசம் இருந்தது என்பதே கண்காணிப்புக் குழுவின் அவதானிப்பாகும். அதிலும் குறிப்பாக கடற்படை, தமக்கு 9 ஆம் திகதியே புலிகளின் கப்பல் வருவதாகத் தகவல் கிடைத்திருந்ததாக அவர்களது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

மோதல் ஏற்படும்வரை இரு தரப்புமே இது குறித்துக் கண்காணிப்புக்குழுவிற்குத் தெரியப்படுத்தவில்லை. மோதல்கள், வன்முறைகளை விசாரிக்கவும், கண்காணித்துச் செயற்படுத்துவதற்குமாக, இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து கண்காணிப்புக் குழுவை நியமித்தபோதும், இத்தகைய சம்பவங்கள் விசனத்தை ஏற்படுத்துகின்றன.

இது தொடர்பாக எமது தரப்புக் கருத்தை இரு தரப்புமே கோரியுள்ளனர். இரு தரப்பிலும் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கண்காணிப்புக்குழு தனது முடிவுகளை எடுத்துள்ளது. இத்தகைய மோதல் சம்பவம் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என கண்காணிப்புக் குழு கூறமாட்டாது. ஆனால், அதே சமயம் புலிகளின் கப்பலில் ஆயுதங்கள் வந்ததாக அரசதரப்புக் கூற்றையும் எரிபொருள் வந்ததாக புலிகளின் கூற்றையும் நிரூபிக்க கண்காணிப்புக்குழுவிடம் ஆதாரங்கள் எதுவுமில்லை. எனினும், இவ்விடயத்தில் கண்காணிப்புக் குழு ஆரம்பத்திலேயே தலையிட்டிருந்தால் இத்தகைய நிலை ஏற்பட்டிருக்காது. இதில் முக்கியமாக, இவ்விடயத்தில் கண்காணிப்புக்குழு ஆரம்பத்தில் தலையிட்டிருந்தால், இச்சம்பவத்தின விளைவு வேறுவிதமாகவே அமைந்திருக்கும். இவை எல்லாவற்றையும் நோக்கும்போது, இச்சம்பவத்துக்கு ஒருதரப்பே பொறுப்பு என்று கூறமுடியாது.

இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்திலும் தொடராமலிருக்க, இத்தகைய சம்பவங்களின்போது இரு தரப்பினரும் பாதுகாப்புப் பொறிமுறை மற்றும் செயல்முறைகளை மேற்கொள்ளுமாறு இரு தரப்புக்கும் நாம் ஆலோசனை கூறியுள்ளோம்.

போர்நிறுத்தம்-இலங்கை அரசினதும், விடுதலைப் புலிகளினதும், இலங்கை மக்களினதும் முயற்சியிலும் சகிப்புத்தன்மை இருப்பின் எந்தப் பிரச்சினையும் இன்றித் தொடரும்.

விடுதலைப் புலிகளின் பதினொரு போராளிகளும் உயிரிழந்துள்ளனர். கடற்படையின் நான்கு உத்தியோகத்தர்கள் காயமுற்றுள்ளனர். போர்நிறுத்தம் தொடர்கிறது. இறந்த போராளிகளின் குடும்பங்களுக்கு நாம் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக கொள்கிறோம்.

காயமடைந்த படையினர் விரைவில் சுகமடைய விரும்புகிறோம். இருதரப்பும் தொடர்ந்து அமைதியைப் பேண வேண்டும். எமது முழு ஆதரவும் உங்களுக்கு உண்டு என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### இராணுவச் சமநிலை...

ஆனால், விடுதலைப்புலிகளின் கடற்போக்குவரத்தையும், வர்த்தகக் கப்பல்களின் போக்குவரத்தையும் கட்டுப்படுத்துவதற்கு அரசு முயற்சித்து வருகிறது.

இவ்வாறான அரசின் நடவடிக்கைகள், விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான இராணுவச் சமநிலையை பெருமளவில் பாதிக்கும் ஒரு விடயமாகும்.

எனவே, இந்த இராணுவச் சமநிலையை சீராகப் பேணுவதற்கு வழி செய்யும் வகையிலான சில ஆலோசனைகளையும், கோரிக்கைகளையும் ஆறாம் சுற்றுப் பேச்சுக்களின்போது விடுதலைப் புலிகள் முன்வைக்க இருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இவ்விடயம் குறித்து இரு தரப்பும் விரிவாக ஆராய்ந்து, சில தீர்க்கமான முடிவுகளையும், நடைமுறைத் திட்டங்களையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு முயற்சிக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(க)

YOGI BEAUTY PARLOUR
LADIES HERBAL BEAUTY CARE & FITNESS CENTRE

யாழ்.நகரில் முதன்முறையாக பெண்களுக்காக எமது அழகு நிலையம் இயந்திர சாதனங்கள் மூலமாக நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் நவீன உடற்பயிற்சி சாதனங்கள் மூலமாக பெண்கள் கட்டான உடலமைப்பைப் பெறுவதற்காக பெண்களுக்கான ஜிம் (GYM) பயிற்சி வசதிகளும் செய்யப்பட்டுள்ளது என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

* முகப்பரு சிகிச்சை
* பொடுகு சிகிச்சை
* முடி உதிர்தலுக்கான சிகிச்சை
(HIGH FREQUENCY TREATMENT)
* HAIR REBONDING
* HAIR PERMING
* HAIR COLOURING
* GOLD FACIAL
* PEARL FACIAL
(SUPERSONIC TREATMENT)
* கரும்புள்ளிகள் அகற்றுதல் (WITH SPOT REMOVER)

உங்கள் எண்ணத்தில் எங்கள் கைவண்ணம்

சகல மங்கள வைபவங்களுக்கும் ஏற்ற ஒப்பனை அலங்காரங்களை வித்தியாசமாகவும் அழகாகவும் திருப்தியாகவும் செய்து கொள்வதற்கு எம்மை நாடுங்கள்.
நீங்களும் அழகுக்கலை நிபுணர்களாக விரும்புகிறீர்களா?
எமது அழகு நிலையத்தில் தற்பொழுது அழகுக்கலை Diploma பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
"Jenet" Herbal Cosmetics Creams எம்மிடம் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:-
MRS. YOGINI SHANMUGANATHAN
Dip.in.cosmetology, Beauty therapy, Hair Dressing & Home Science (India, Co.Srilanka)
222 2796
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக) (285)

## துயர் பகிர்கின்றோம்

யாழ்.பல்கலைக் கழக கலைப்பீட 4 ஆம் வருட மாணவன்
பொனிபாஸ் கமிலஸ் கொன்சன்டைன அவர்களின் அன்புத் தாயார்

### பொனிபாஸ் ஜொய்சி

அவர்களின் திடீர் மறைவால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அனைத்து விடுதிகள் மாணவர் ஒன்றியம்.
யாழ். பல்கலைக்கழகம். (287)

## விஞ்ஞானபீட 3ஆம் வருட A பிரிவு மாணவர்களுக்கான அறிவித்தல்

எமது வருடத்திற்கான "We are going party" எதிர்வரும் 22. 03. 2003 (சனிக்கிழமை) "Loyala's Wedding Hall" இல் நடைபெறும்.

Note:- அன்றைய தினமே 3 ஆம் வருட A பிரிவு மாணவர்களுக்கான Batch Photo எடுக்க இருப்பதால் மாணவர்களை சனிக்கிழமை 8. 30 மணியளவில் பல்கலைக்கழகத்திற்கு சமுகந்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

3 ஆம் வருட A பிரிவு மாணவர்கள்,
விஞ்ஞான பீடம்.
(284)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.75 | 97.09 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 154.32 | 155.79 |
| 1 யூரோ | 106.36 | 107.65 |
| 1 சுவிஸ் பிராங் | 72.35 | 73.66 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 59.01 | 60.15 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.85 | 25.85 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.